# தேவனுடைய ராஜ்ய சீஷத்துவ நிகழ்ச்சி கையேடு

*தொகுப்பு 1*



*கர்த்தரின் மகிமை மற்றும் அவரது பெரிதான அன்பினை அறிந்திடும் அறிவில் பெருகவும், அவரது முழுமையின் அளவில் நிறையவும், உலகம் அவரை அறியும்படி பிறரும் தங்கள் வாழ்க்கை பிரயாணத்தில் அவ்வாறே செய்திடும்படி அவர்களை மேம்படுத்தவும், தேவனுடைய ராஜ்ய சீஷத்துவ நிகழ்ச்சி வாய்ப்பை அளிக்கிறது.*

*2016 பதிப்புரிமை மற்றும் பிரசுரம் உரிமை இலவசம். மேலும் இலவச மூலாதாரங்களுக்கு அணுகவேண்டியது: www.jesuslovestheworld.info அல்லது மின்அஞ்சல் info@jesuslovestheworld.info*

*ஜீசஸ் லவ்ஸ் : த வர்ல்ட் ஒரு லாப நோக்கமற்ற, தன்னார்வ அடிப்படையினாலான, தேவனுடைய ராஜ்ய முனைவு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் நடைமுறைக்குரிய கருத்தரங்குகளின் மூலம் உள்நாட்டுத் தலைவர்களை பயிற்றுவித்து, மேம்படுத்தி, சபைகளில் பிரசங்கித்தும், வேதாகமக் கல்லூரிகளில் கற்பித்தும், உலகம் முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தின் மூலாதாரங்களை இதய மொழிகளில் உருவாக்குகிறது.*

# உள்ளடக்கம்


*அறிமுகம் ........................................................................ 2*

*1: காணப்படாதவற்றை காணுதல் .................................. 3*

*2: அவரை அறிந்திட ............................................................ 4*

*3: தம்மை தனிநபருக்கும் உரியவராக்குதல் ................. 7*

*4: இதுவே காலம் ............................................................ 10*

*5: தேவன் இவ்வளவாய் அன்புகூருகிறார் .................. 13*

*6: பிதாவின் அன்பு ..........,............................................. 15*

*7: குமாரனின் அன்பு ....................................................... 18*

*8: பரிசுத்த ஆவியானவரின் அன்பு ............................... 20*

*9: நான் இருக்கிற வண்ணமாகவே என்னை ஏற்றுக்கொள்ளுதல் ...................................................... 22*

*10: அடையாளம் – ஆவியில் பிறக்கிறது ..................... 24*

*11: பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்படுதல் ..... 28*

*12: உறவுகள் ................................................................... 31*

*13: பிறரை அவர்கள் இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளுதல் ...................................................... 34*

*14: உறவுகள் – சமத்துவம் .................................................. 37*

*15: உறவுகள் – சீஷத்துவம் ................................................. 40*

*16: உறவுகள் – தேவனுடைய ராஜ்யம் ........................... 42*

*ஜெபம் ........................................................................... 44*

*10 விதைகள் பணித்தாள் ................................................. 45*

# அறிமுகம்

*ஒப்புரவாகுதல், மீட்டெடுத்தல் மற்றும் யாவற்றையும் தமக்கென புதுப்பித்திட தேவன் எல்லாவற்றையும் அன்பினாலேயே நடப்பிக்கின்றார். அவர் தொடர்புடையவர், அவர் நெருக்கமானவர், அவர் தனிப்பட்டவருமாவார்.*

இத்தொகுதிகளின் மூலம் மிகுந்த பயனடையும்படி நான் உங்களை வேண்டிக்கொள்வது:

- தேவன் உங்களோடு பேசுவதைக் கேட்க எதிர்பாருங்கள்
- கேள்விகள் கேளுங்கள்
- உங்கள் எண்ணங்களை பகிர்ந்து, கலந்துரையாடுங்கள்
- உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்
- எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பிரயாணத்தை மகிழ்ந்து அனுபவியுங்கள்

## தேவனுடைய திட்டம்

வானத்திலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய ஆட்சிக்குக் கீழ் கொண்டு வருதலே, கால ஆரம்பத்திற்கும் முன்பே திட்டமிடப்பட்ட தேவனுடைய இரட்சிப்பின் நோக்கம். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் பிரபஞ்சத்திற்கு நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் மறுபடியும் பெற்றிட செய்கிறார். அவரில் நாம் அவரோடு ஒன்றாய் இருக்கிறோம்.

***எபேசியர் 1:9-10*** *தேவன் முழு ஞானத்தோடும், பலத்தோடும் அவரது இரகசியத் திட்டத்தை நாம் அறியச் செய்தார். சரியான நேரம் வரும்போது தனது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது தேவன் ஏற்கெனவே செய்த முடிவு. பரலோகத்திலும், பூமியிலும் உள்ள அனைத்து பொருள்களும் ஒன்று கூடி கிறிஸ்துவின் கீழ் இருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய திட்டம். (ERV)*

## சீஷர்களை உருவாக்க

இயேசு தம்மைப் பின்பற்றினோருக்கு (சீஷர்களுக்கு) தங்கள் வாழ்க்கை பயணத்தில் தம் ஆவியின் மூலம் பின்பற்றுவோரை (சீஷர்களை) உருவாக்கும் அதிகாரத்தை அளித்தார்.

***மத்தேயு 28:18-20*** *ஆகவே இயேசு அவர்களிடம், "வானத்திலும் பூமியிலும் முழு அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உலகில் உள்ள மக்கள் அனைவரையும் சீஷர்களாக்குங்கள். பிதாவின் பெயராலும் குமாரனின் பெயராலும் பரிசுத்த ஆவியானவரின் பெயராலும் அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்குங்கள். நான் உங்களுக்குக் கூறிய அனைத்தையும் அவர்களும் பின்பற்றும்படி போதனை செய்யுங்கள். நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருப்பேன் என்பதில் உறுதியாயிருங்கள். உலகின் முடிவுவரையிலும் நான் உங்களுடன் தொடர்ந்து இருப்பேன்" என்றார். (ERV)*

சீஷத்துவம் என்பது தேவன் யார் என அறிவதின் மூலம், அவரையும் அவரது அன்பினையும் அறிந்து, அவர் செய்தவற்றையும், செய்யப் போகிறவற்றையும் அறிந்துகொள்வதில் ஆரம்பமாகிறது. அவரது வார்த்தை, அவரது பிரசன்னம், ஆராதனை, ஜெபம் மற்றும் பிற விசுவாசிகளோடுள்ள ஐக்கியம் போன்றவற்றில் நேரம் செலவளித்தல், தேவனை அறிந்திட நமக்கு உதவியாக இருக்கிறது.

இந்த சீஷத்துவ நிகழ்ச்சியில் நாம் பயணமாய் செல்கையில், நீங்கள் கர்த்தருடைய ஆவியினால், அவருடைய மகிமை மற்றும் அவரது பெரிதான அன்பினை அறிந்திடும் அறிவில் பெருகிடவும், தேவனுடைய எல்லா முழுமைத்துவத்திலும் நிறைவடையவும், அதன் மூலம் உலகம் அவரை அறியும்படி, நான் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

# தொகுதி 1: காணப்படாதவற்றை காணுதல்

*சிருஷ்டிகராகிய தேவன் தொடர்புசார்புடையவர். அவரது வார்த்தை தனிநபரை சார்ந்தது. அவரது பிரசன்னம் நெருக்கமானது. அவரது சிருஷ்டிப்பு நற்சாட்சி உடையது.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்த விரும்புவதை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## குழு கலந்தாலோசித்தல்

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தும் வெவ்வேறு வழிகளை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

***சங்கீதம் 19:1-6** மற்றும் **ரோமர் 1:20** வாசிக்கவும்*

***ஓசியா 12:10** வாசிக்கவும்*

***ஆதியாகமம் 31:11** வாசிக்கவும்*

*தேவன் சிருஷ்டிப்பில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். [இயற்கை, தேவனுடைய தீர்க்கதரிசிகள் மற்றும் தேவ தூதர்கள் உட்பட]*

***உபாகமம் 4:35-39** வாசிக்கவும்*

***ஆதியாகமம் 15:1** வாசிக்கவும்*

***2 ராஜாக்கள் 5:1, 14-15** மற்றும் **யோவான் 9:1-7** வாசிக்கவும்*

*தேவன் அற்புதங்களில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். [அடையாளங்கள், அதிசயங்கள், தரிசனங்கள், குணப்படுத்துதல் உட்பட]*

***லூக்கா 24:27** மற்றும் **யோவான் 20:31** வாசிக்கவும்*

***சங்கீதம் 33:6-9** வாசிக்கவும்*

*தேவன் தம் வார்த்தையில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். [எழுதப்பட்ட மற்றும் பேசப்பட்ட வார்த்தை இதில் அடங்கும்]*

***யோவான் 1:14-18; 14:6-7** மற்றும் **எபிரெயர் 1:1-4** வாசிக்கவும்*

*தேவன் இயேசுவில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.*

***யோவான் 16:13-15** மற்றும் **1 யோவான் 5:6** வாசிக்கவும்*

*தேவன் தம் ஆவியானவர் மூலம் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.*

## சாட்சி பகரவும்

*தேவன் தங்களுக்கு தம்மை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என இரண்டு அல்லது மூன்று வரிகளில் பகிர்ந்துகொள்ளும்படி ஒவ்வொருவரையும் கேட்கவும்.*

## நன்றியறிதலான இறுதி ஜெபம்

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்த விரும்புவதினால் யாராவது ஒருவர் தேவனுக்கு நன்றி கூறும்படி கேளுங்கள்.*

# தொகுதி 2: அவரை அறிந்திட

*சிருஷ்டிகரான தேவன் காலம் மற்றும் இட பரிமாணங்களுக்கு அப்பாற்பட்டவர், ஆயினும் நம் கால இட வரையரை வாழ்வில் நமக்கு தம்மை தனிப்பட்டவராக ஆக்குகிறார்.*

## ஆரம்ப ஜெபம்

ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.

### ஆராதனை

தேவனுடைய மகத்துவத்தை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.

## அறிமுகம்

முதலாம் தொகுதியில் தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தும் வெவ்வேறு வழிகளை நாம் கற்றோம். வேதாகமத்தை - தேவன் நமக்காக எழுதிய தனிப்பட்ட அன்பின் கடிதத்தை - நாம் வாசித்து ஆராயும்போது நாம் அவரைக்குறித்து அதிகமாக கற்றுக்கொள்கிறோம். வேதத்தின் முதல் வார்த்தைகளான *'ஆதியிலே தேவன்...சிருஷ்டித்தார்'* என்னும் பதமானது, ஆரம்பம் எதுவாயினும் எங்கிருப்பினும் தேவன் அங்கு இருந்தார், அவர் சிருஷ்டித்தார் என வெளிப்படுத்துகிறது. தேவனை இன்னும் அதிகமாய் அறிந்திட வேதத்தில் பதிவாகியுள்ள தேவனுடைய மூன்று தரிசனங்களை ஆராய்வோம்.

## வேத ஆராய்ச்சி – தேவனுடைய தரிசனங்கள் – எசேக்கியேல்

தேவன் தம்மை யாரிடம் வெளிப்படுத்துகிறாரோ, அவர்களின் தேவைக்கு ஏற்றார்போல் தம்மை வெளிப்படுத்துகிறார். எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய தரிசனத்தை நாம் ஆராய்வோம்.

## தரிசனத்தின் சூழ்நிலை

யூத கோத்திரத்தானாகிய எசேக்கியேல், ஒரு தீர்க்கதரிசியும் ஆசாரியனுமாவார். எசேக்கியேலும், இச்சரித்திரக் காலக் கட்டத்தில் வாழ்ந்த மீதமுள்ள யூதர்களும் அந்நிய தேசத்தில் சிறை பிடிக்கப்பட்டோராயிருந்தனர் (**எசேக்கியேல் 1:1**). அவர்கள் தங்கள் சொந்த ஆராதனை ஸ்தலமாகிய எருசலேம் பட்டணத்தைவிட்டு வெகு தொலைவில் இருந்தனர். யூதர்கள் கீழ்படியாத மக்களாய் அந்நிய தேவர்களை வணங்கினர். எனவே தேவன் தம் வார்த்தையை ஒரு தரிசனத்தின் மூலம் தம் தீர்க்கதரிசியும் ஆசாரியனுமான எசேக்கியேலுக்கு அனுப்புகிறார் (**எசேக்கியேல் 1:3**).

**எசேக்கியேல் 1:15-21** வாசிக்கவும்

இந்த வேதப்பகுதியை தியானித்து ஒரு தடவைக்கு மேல் தொடர்ந்து வாசிக்கவும்.

## குழு கலந்தாலோசித்தல்

இந்த வேத பகுதியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஐந்து காரியங்கள் எவை என கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.

**வசனம் 15** ஜீவ ஜந்துக்கள்

**வசனங்கள் 16-17** சக்கரங்கள் - ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஓடுகின்றன

**வசனம் 18** கண்கள்

**வசனம் 19** பூமி - சக்கரங்கள் பூமிக்கு மேலாக எழுப்பப்படுகின்றன.

**வசனம் 21** ஆவி

*இப்பகுதிக்கு தவறான அர்த்தத்தைக் கொடுக்காதபடிக்கு உதவிட பின்வரும் கேள்விகளை இப்பகுதியிலிருந்து கேட்கவும்:*

*இப்பகுதியிலுள்ள மக்கள்* ***யார்****?* ***எசேக்கியேல் 1:1-3*** *வாசிக்கவும்*

*எசேக்கியேல், தேவன், சிறை கைதிகள் (யூதர்கள்), கல்தேயர்கள்.*

*பேசுகிறது* ***யார்****?*

*எசேக்கியேலாகிய 'நான்'.*

*இவர்* ***யாருடன்*** *பேசுகிறார்?* ***எசேக்கியேல் 1:28–2:5*** *வாசிக்கவும்*

*யூதர்கள்.*

*மக்கள் ஒருவரோடொருவர்* ***எவ்வாறு*** *அளவளாவுகின்றனர்?*

*தேவன் தம்மை ஒரு தரிசனத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார், பின்பு எசேக்கியேலுடன் பேசுகிறார். எசேக்கியேல் கவனித்துக் கேட்கிறார்.*

*இச்சம்பவம்* ***எங்கே*** *நடைபெற்றது?*

*கல்தேயரின் அந்நிய தேசத்திலே நதியண்டையில்.*

*இச்சம்பவம்* ***எப்போது*** *நடைபெற்றது – இயேசு மாம்சமும் இரத்தமும் ஆகி, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரத்துக்கேறினதற்கு முன்னரா அல்லது பின்னரா?*

*கல்தேயரின் தேசத்திலே இஸ்ரவேலர் கைதிகளாயிருக்கையில். இயேசு மனித ரூபமாவதற்கு முன்னர்.*

*சக்கரம்* ***எதைக்*** *குறிக்கிறது?*

*இன்று இந்திய கொடியிலுள்ள சக்கரமானது இயக்கத்தில் இருக்கும் வாழ்வை அல்லது காலத்திற்கு ஆரம்பமும் முடிவும் இல்லாத வாழ்க்கை சக்கரத்தைக் குறிக்கிறது.*

*எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய தரிசனத்தின் சூழலில், சுற்றிக்கொண்டிருக்கும் சக்கரங்கள் தேவனை பற்றி எதை குறிக்கின்றன?*

*தேவன் எங்கும் இருக்கிற தேவன். அவர் எருசலேமின் தேவாலயத்திலோ ஒரு பிராந்தியத்திலோ அல்லது ஒரு தேசத்தில் மாத்திரம் இருப்பவர் அல்ல. தேவன் எங்கும் இருக்கிற தேவன். அவருக்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. தேவன் நித்தியமானவர் ...தேவன் எக்காலக் கட்டத்திற்கும் இட பரிமாணங்களுக்கும் மேம்பட்டவர் ஆவார்.*

*எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட தேவனைப் பற்றிய இந்த தரிசனத்தின் சூழலில், கண்கள் தேவனை எவ்வாறு குறிக்கிறது?*

*தேவன் யாவற்றையும் காண்கிறார் – அவர்களுடைய கீழ்ப்படியாமை, அவர்களுடைய பெலவீனங்கள், அவர்களின் மாம்ச இச்சைகள், அவர்கள் பிற தேவர்களை அந்தரங்கத்தில் வணங்குதலையும்கூட (****எசேக்கியேல் 8:12****). ஆயினும், அவ்வித அடிமைத்தனத்திலிருந்து தம் மக்களை விடுவித்திட தேவன் விருப்பமுள்ளவராயிருக்கிறார்.*

*அது* ***ஏன்*** *எழுதப்பட்டது?*

*எல்லாம் அறிந்த, யாவையும் காண்கிற, சர்வ வல்லமையுள்ள, அகில உலகின் தேவனாகத் தம்மை வெளிப்படுத்தினதின் மூலம், தேவன் எசேக்கியேலுக்கு ஊக்கத்தை அளித்தார். அந்நிய தேசத்திலும்கூட, தேவன் எசேக்கியேலோடும் யூதர்களோடும் இருக்கிறார் (****எசேக்கியேல் 11:16****) மாம்ச இச்சைகளிலிருந்தும், பிற தேவர்களை வணங்குவதிலிருந்தும் தம் மக்களை விடுவிக்க அவர் விரும்புகிறார் (****எசேக்கியேல் 11:17-25****).*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள் **எவை**?*

*தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் எவ்விடத்திற்கும் தேவனானவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் காண்பவர். அவர் மக்களை மாம்ச இச்சையிலிருந்தும் பிற தெய்வ வழிப்பாட்டிலிருந்தும் விடுவிக்க வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். இன்றும் கீழ்ப்படியாதவராக, தம் சொந்த மாம்ச இச்சையில் கட்டுண்டவர்களாய், பிற தெய்வங்களை வணங்குபவர்களாய் இருக்கும் மக்கள் உள்ளனர்.*

இது நமக்கு இன்று **என்ன** அர்த்தம் உடையதாயிக்கிறது? குழுவாக கலந்தாலோசிக்கவும்.

*தேவனை எவ்விடத்திற்கும் தேவனாகவும், எல்லாம் அறிந்தவராகவும், எல்லாவற்றையும் காண்பவராகவும் அறிவதினால், நாம் எங்கிருந்தாலும், எப்பேற்பட்ட பெலவீனங்களை உடையவர்களாயிருந்தாலும், எச்சூழ்நிலையிலிருந்தாலும், தேவன் நம்மோடிருக்கிறார் என அர்த்தமாகிறது. அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தி, நம்மை பாதுகாக்க விரும்புகிறார்.*

இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம் **என்ன**?

*தேவன் காலம் மற்றும் இட பரிமாணங்களுக்கும் அப்பாற்பட்டவர். அவரது மக்கள் எங்கிருந்தாலும் எந்நிலையிலிருந்தாலும் அவர் அவர்களோடிருக்கிறார். இந்த அந்நிய தேசத்தில் தாம் அவர்களோடிருப்பதை எசேக்கியேலுக்கும் யூதர்களுக்கும் உறுதிப்படுத்திடும்படிக்கு தேவன் தம்மை பார்க்கும்படி அனுமதிக்கிறார். தேவன் சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்படுபவரல்ல. அவர் எப்போதும் நம்மோடிருக்க விரும்புகிறார், நம்முடன் உறவு கொள்ள, எப்போதும் காண்கிறவராக, நமக்காக ஏங்குகிறவராக, தம்மிடம் யார் வருவார், தம்மை யார் தள்ளிவிடுவார் என்று அறிந்த போதிலும்...இன்னமும் தொடர்ந்து அன்பு செய்கிறவராய் இருக்கிறார். இயேசு எல்லோருக்காகவும் மரித்தார், ஆம், அவரைப் பின்பற்றப்போவதில்லை என அவர் அறிந்தவர்களுக்காகவும்கூட. எத்தகைய அன்பு அவர் அன்பு!*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

## *நன்றியறிதலான இறுதி ஜெபம்*

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்த விரும்புவதினால் யாராவது ஒருவர் தேவனுக்கு நன்றி கூறும்படி கேளுங்கள்.*

# தொகுதி 3: தம்மை தனிநபருக்கும் உரியவராக்குதல்

*தேவன் தொடர்பு கொள்கிறவர். அவருடைய தொடர்புகள் தனிப்பட்டது.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

### ஆராதனை

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தி, நம் தேவைகளுக்கேற்ப நம்மை அணுகிட விருப்பம் உள்ளவராயிருக்கிறார் என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி – தேவனுடைய தரிசனங்கள் – யாக்கோபு

*பல விதமான தொடர்பு முறைகளின் மூலம் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் என நாம் கற்றுக்கொண்டோம். தேவன் தம்மை யாரிடம் வெளிப்படுத்துகிறாரோ, அவர்களின் தேவைக்கு ஏற்றார்போல் தம்மை வெளிப்படுத்துகிறார். யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய தரிசனத்தை நாம் ஆராய்வோம்.*

## தரிசனத்தின் சூழ்நிலை

*யூத கோத்திரத்தானாகிய யாக்கோபு, ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் குமாரனாவார். ஈசாக்கு, ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் குமாரனாவார். ஆபிரகாமும் ஈசாக்கும் தேவனிடமிருந்து ஒரு தனிப்பட்ட வாக்குத்தத்தத்தை பெற்றனர். மூத்த குமாரனின் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக யாக்கோபு தன் மூத்த சகோதரனை ஏமாற்றியிருந்தார். அதன் விளைவாக யாக்கோபின் தாயார் ரெபேக்காள் யாக்கோபை அவன் சகோதரனின் கோபத்திற்கு விலகி ஓடிடும்படி கூறினாள். மற்றும் யாக்கோபு மணம் முடித்திடும்படிக்கு மனைவியை பெற்றிட ஈசாக்கு அவனை ஒரு மணப்பெண்ணைத் தேடும்படி, ராகேலின் குடும்ப கோத்திரத்திற்கு அனுப்பி வைத்தார்.*

***ஆதியாகமம் 28:10–22*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதபகுதியில் நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*இப்பகுதிக்கு தவறான அர்த்தத்தைக் கொடுக்காதபடிக்கு உதவிட பின்வரும் கேள்விகளை இப்பகுதியிலிருந்து கேட்கவும்:*

*இப்பகுதியிலுள்ள மக்கள்* ***யார்****?*

*தேவன், யாக்கோபு மற்றும் தேவதூதர்கள்.*

*பேசுகிறது* ***யார்****?*

*தேவன்.*

*அவர்* ***யாருடன்*** *பேசுகிறார்?*

*யாக்கோபு.*

*மக்கள் ஒருவரோடொருவர் **எவ்வாறு** அளவளாவுகின்றனர்?*

*தேவன் தம்மை ஒரு தரிசனத்தில் வெளிப்படுத்துகின்றார். பின்பு யாக்கோபுடன் பேசுகின்றார். யாக்கோபு கவனித்துக் கேட்கிறார்.*

*தேவன் தம்மை யாக்கோபுக்கு **எப்படி** அறிமுகப்படுத்துகின்றார்? **வசனம் 13** வாசிக்கவும்*

*'நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்.'*

*தேவன் தம்மை அறிமுகப்படுத்துவதின் விதமானது யாக்கோபோடு அவருக்கிருந்த தொடர்பைப்பற்றி நமக்கு **என்ன** கூறுகிறது?*

*யாக்கோபிற்கு தேவனோடுகூட தனிப்பட்ட உறவு இல்லை. அவன் தன் தகப்பனின் தேவனைக்குறித்து அறிந்திருந்தான். ஆனால் அவனே தேவனை அனுபவித்து அறியவில்லை.*

***வசனம் 15**ல் தேவன் யாக்கோபுக்கு **என்ன** வாக்குப்பண்ணினார்?*

*யாக்கோபோடுகூட தான் இருக்கிறார், அவன் போகும் இடமெல்லாம் அவர் அவனைக் காத்து, இந்த தேசத்துக்கு அவனைத் திரும்பி வரப்பண்ணுவார், அவனை விட்டு விலகமாட்டார் என்று தேவன் யாக்கோபுக்கு வாக்களித்தார்.*

*இச்சம்பவம் **எங்கே** நடைபெற்றது? **வசனம் 19** வாசிக்கவும்*

*யாக்கோபால் பெத்தேல் என மறுபெயர் கொடுக்கப்பட்ட லூஸ் என்னும் நகரத்தில்.*

*ஏணி **எங்கே** வைக்கப்பட்டிருந்தது? அந்த ஏணி **எதை** எட்டி இருந்தது? **வசனம் 12** வாசிக்கவும்*

*ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதன் நுனி வானத்தை எட்டி இருந்தது.*

*யாக்கோபுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட இத்தரிசனத்தின் சூழ்நிலையில் ஏணி எதைக் குறிக்கிறது?*

*தேவனுக்கு மக்களோடுள்ள உறவை ஏணி குறிக்கிறது. தேவன் வானிலிருந்து பூமிக்கு கீழிறங்கி வந்து தம்மைத்தாமே நமக்களிக்கிறார். யாக்கோபு வாழும் பூமியிலிருந்து தேவன் வாழும் பரலோகத்தை நோக்கும் ஒரு தரிசனத்தின் மூலம் யாக்கோபுக்கு தேவன் தம்மைப்பற்றின ஒரு தனிப்பட்ட அனுபவத்தை அளித்தார்.*

*இச்சம்பவம் **எப்போது** நடைபெற்றது – இயேசு மாம்சமும் இரத்தமும் ஆகி, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரத்துக்கேறினதற்கு முன்னரா அல்லது பின்னரா?*

*இயேசு மாம்சத்திலும் இரத்தத்திலும் வரும் முன்னர்.*

*அது **ஏன்** எழுதப்பட்டது?*

*யூதா கோத்திரம் மற்றும் அவர்களுக்கு தேவனோடிருந்த தொடர்பைப்பற்றின உண்மையான சரிதையின் மூலம் நாம் தேவனைக்குறித்து அதிகமாகக் கற்றுக் கொள்கிறோம். யாக்கோபுக்கு தேவன் தம்மைப் பற்றின ஒரு தனிப்பட்ட அனுபவத்தை அளித்தார். தேவனை தகப்பனின் தேவனாகவோ அல்லது பாட்டனாரின் தேவனாகவோ அறிந்திருப்பது போதுமானதல்ல. இப்பொழுது யாக்கோபு தனிப்பட்ட முறையில் தேவனை அறிகிறான். அதன் விளைவாக தனக்கே உரிய தனிப்பட்ட வாக்குத்தத்தத்தை பெறுகிறான்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள் **எவை**?*

*தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் தனிப்பட்ட முறையில், நம் தேவைக்கு ஏற்றார்போல் தம்மை வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும், யாரை வணங்குவதென்று தனக்குத்தானே தேர்ந்தெடுத்திட வேண்டும்.*

*அது நமக்கு இன்று **என்ன** அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*பூமியிலுள்ள தன்னை அடையும்படியாக பரலோகிலிருந்து வந்த தேவனைக் குறித்து யாக்கோபு ஒரு தரிசனம் கண்டான். மாம்சத்திலும் இரத்தத்திலும் மனித உருவெடுத்து தேவன் பூலோகிற்கு வந்தார். மனித குமாரன், தேவ குமாரன், இயேசு கிறிஸ்து (அபிஷேகம்பண்ணப்பட்டவர்).*

***யோவான் 1:51**ல் இயேசு தம் சீஷர்களிடம் வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து (தம்மிடமிருந்து) இறங்குகிறதையும் ஏறுகிறதையும் காண்பார்களெனவும் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் மூலம் பரலோகம் திறந்திருக்கிறது. இன்று இயேசு கிறிஸ்துவின் மூலம், பரிசுத்த ஆவியானவரால், தேவனை நாம் தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள முடிகிறது. தேவனோடு நேரடியான தொடர்பு நமக்கு உண்டு. நாம் எவ்வித சூழ்நிலையிலிருந்தாலும் அவர் காத்திருக்கிறார்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம் **என்ன**?*

*ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் அவர்களுடைய தேவைக்கேற்றார் போல் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். தனிப்பட்ட முறையில் தேவனை அறிந்து கொள்வது யாக்கோபுக்கு அவசியமாயிருந்தது. நம்முடைய தகப்பனின் தேவனாக தேவனை அறிவது போதுமானதல்ல. யாக்கோபு தவறு செய்தபோதும்கூட, அவனது தனிமைப்படுத்தப்பட்ட வேளையில், தேவன் தம்மை யாக்கோபுக்கு வெளிப்படுத்தி அவனை ஆசீர்வதிக்க விரும்பினார். தேவன் தொடர்புகொள்ளும் தேவன். அவர் தனிநபருக்கு உரிய தேவன். அவர் அன்புள்ள தேவன், ஆசீர்வதிக்க ஆயத்தமுள்ளவராக இருக்கிறார். அவர் உண்மையுள்ள தேவனும், தம் எல்லா வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுகிறவருமாயிருக்கிறார்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

## நன்றியறிதலான இறுதி ஜெபம்

*தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்த விரும்புவதினால் யாராவது ஒருவர் தேவனுக்கு நன்றி கூறும்படி கேளுங்கள்.*

# தொகுதி 4: இதுவே காலம்

*இதோ அவர் கண்கள் நெருப்பைப்போன்றது! அவரை ஏற்றுக்கொள்வோர் அன்பு, ஒளி மற்றும் ஜீவனைக் காண்பர். அவரை ஒதுக்கித் தள்ளிவிடுவோர் அழிவையும், இருளையும், மரணத்தையும் காண்பர்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*இயேசுவே பரலோகத்திற்கு வழி என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி – தேவனுடைய தரிசனங்கள் – யோவான்

*பல விதமான தொடர்பு முறைகளின் மூலம் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் என நாம் கற்றுக்கொண்டோம். தேவன் தம்மை யாரிடம் வெளிப்படுத்துகிறாரோ, அவர்களின் தேவைக்கு ஏற்றார்போல் தம்மை வெளிப்படுத்துகிறார். யோவானுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய தரிசனத்தை நாம் ஆராய்வோம்.*

## தரிசனத்தின் சூழ்நிலை

*தான் நம்பினவைகளுக்காக யோவான் நாடு கடத்தப்பட்டார். சபையானது உபத்திரவத்திற்குள்ளிருந்தது. மனித சாம்ராஜ்யங்களிலே மிகவும் மோசமான, கருணையற்ற, வலிமையான ரோமர்கள் ஆட்சியில் இருந்தனர். ஒடுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையில், தேவனுடைய வெளிப்பாட்டை அவருடைய எல்லா மாட்சிமையிலும், அன்பிலும், வல்லமையிலும் யோவான் பெற்றார். தேவன் சிங்காசனத்தில் இருந்தவராகவும் இருக்கிறவராகவும் வரப்போகிறவராகவும் இருக்கிறார். அவரது வல்லமை சதா காலங்களிலுள்ள எல்லா தீமைக்கும் மற்றும் எல்லா மனித சாம்ராஜ்யங்களுக்கும் மேலானதாக இருக்கிறது. யோவான் மற்றும் விசுவாசிகள் அனைவரும் தீமையின் முடிவு வருகிறதென நிச்சயித்துக்கொள்ளலாம். இயேசு அதை முறியடித்தார். தீமையானது இரவல் காலத்திலுள்ளது. தீமை இனி இல்லாமல் போவதற்கு முன் தம்மிடம் தாமாக வருபவர்களுக்காக தேவன் காத்திருக்கிறார்.*

*இயேசுவின் வெளிப்படுத்தலின் ஒரு சிறு பகுதியையும், நிகழ்ந்த காரியங்களையும் நாம் பார்ப்போம்.*

***வெளிப்படுத்தல் 4:1-11*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*ஒவ்வொரு வசனமாக இவ்வேதப் பகுதியில் பட்டியலிடப்பட்டுள்ள விஷயங்களை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

***வசனம் 1*** *பரலோகத்தில் திறக்கப்பட்டிருக்கும் வாசல்.*

***வசனம் 2*** *வானத்தில் ஒரு சிங்காசனம். அந்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவர்.*

***வசனம் 3*** *சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்.*

***வசனம் 4*** *அந்த சிங்காசனத்தைச் சுற்றி இருபத்துநான்கு சிங்காசனங்களில் இருபத்துநான்கு மூப்பர்கள் உட்கார்ந்திருந்தனர்.*

***வசனம் 5*** *சிங்காசனத்திலிருந்து இடிமுழக்கங்களும், மின்னல்களும், சத்தங்களும் புறப்பட்டன. ஏழு தீபங்கள் = தேவனுடைய ஏழு ஆவிகள்.*

***வசனம் 6*** *கண்ணாடிக்கடல். கண்களால் நிறைந்திருந்த நான்கு ஜீவன்கள்.*

***வசனம் 7*** *முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன.*

*அந்த நான்கு ஜீவன்களும் இரவும் பகலும் **என்ன** சொல்லிக் கொண்டிருக்கின்றன? **வசனம் 8** வாசிக்கவும்*

*"சகல வல்லமையும் உள்ளவராகிய கர்த்தராகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,*

*அவர் எப்போதும் இருந்தார், இருக்கிறார், இனிமேல் வரப்போகிறார்." (ERV)*

*சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவரை நான்கு ஜீவன்களும் வணங்குகையில் இருபத்துநான்கு மூப்பர்களும் **என்ன** செய்கின்றனர்? **வசனம் 9-10** வாசிக்கவும்*

*சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து தொழுகின்றனர்.*

*இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரை வணங்குகையில் **என்ன** சொல்கின்றனர்? **வசனம் 11** வாசிக்கவும்*

*'எங்கள் கர்த்தரும் தேவனுமானவரே! மகிமைக்கும், கனத்திற்கும், வல்லமைக்கும் தகுதியானவர் நீர் அதிகாரமும் உள்ளவர். எல்லாவற்றையும் படைத்தவர் நீர். உம் விருப்பத்தாலேயே யாவும் படைக்கப்பட்டு நிலைத்திருக்கவும் செய்கின்றன.' (ERV)*

*பரலோகத்திற்கு திறக்கப்பட்டிருக்கும் வாசல்: யோவான் பார்க்கிற வாசல் நம்மை சுத்திகரித்திருக்கும் இயேசுவின் பரிபூரணமான இரத்த பலியை அடையாளப்படுத்துகிறது. இயேசு தம்மைத்தாமே இரத்த பலியாக செலுத்தினதை நாம் பெற்றுக்கொள்கையில், தேவனுடைய ஆவியை நமக்குள்ளும், அவருடைய பிரசன்னத்தை நம்மீதும் நம்மை சுற்றியும் பெற்றவர்களாகிறோம்.*

*இயேசுவின் நிமித்தம், மாம்சமும் இரத்தமுமாகிய தேவன் நம்மில் ஒருவராகி, தம் ஜீவனை பலியாக்கி, உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறி, பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்ததினால், அவருடைய ஆவியினால் தேவனுடைய சிங்காசனத்தண்டை நாம் அணுகிட முடியும்.*

*இப்போதைய காலத்தில், தீமையினால் பாதிக்கப்பட்ட இவ்வுலகில், ஆவியில் நாம் தேவனுடைய சிங்காசனத்தண்டையில் அணுகி, அவரோடுகூட தொடர்ச்சியான சந்திப்பும், ஐக்கியமும், ஆலோசனையும், தொடர்பும், அன்பும், வெளிப்பாடும் கொள்ளலாம்.*

*வருகின்ற காலத்தில், நாம் நம்முடைய உயிர்த்தெழுந்த பரிபூரணப்பட்ட சரீரத்தில், தேவனுடைய சிங்காசனத்தண்டையில் அணுகி, அவரை நேருக்கு நேர் காண்போம் என்பது நம் நம்பிக்கையாகும். அங்கு கண்ணீரோ, வேதனையோ, முதுமையடைதலோ, வியாதியோ இருப்பதில்லை. காலம் நிறைவடைகையில் யாவும் பூரணப்படும்.*

*இப்பகுதிக்கு தவறான அர்த்தத்தைக் கொடுக்காதபடிக்கு உதவிட பின்வரும் கேள்விகளை இப்பகுதியிலிருந்து கேட்கவும்:*

*இப்பகுதியிலுள்ள மக்கள் **யார்**?*

*யோவான், சத்தம், தேவன் (சிங்காசனத்தில் வீற்றிருப்பவர்), நான்கு ஜீவன்கள், இருபத்து நான்கு மூப்பர்கள், தேவனுடைய ஏழு ஆவிகள்.*

*பேசுகிறது **யார்**?*

*எழுத்தர் யோவான், சத்தம் (வசனம் 1), நான்கு ஜீவன்கள் (வசனம் 8), இருபத்து நான்கு மூப்பர்கள் (வசனம் 11).*

*அவர் **யாருடன்** பேசுகிறார்? **வெளிப்படுத்தல் 1:4** வாசிக்கவும்*

*அக்காலத்திலும் மற்றும் எல்லா காலங்களிலும் உள்ள விசுவாசிகளோடு யோவான் பேசுகிறார்.*

***வெளிப்படுத்தல் 4:1** வாசிக்கவும்*

*சத்தமானது யோவானோடு பேசுகிறது.*

***வெளிப்படுத்தல் 4:8** வாசிக்கவும்*

*நான்கு ஜீவன்களும் சிங்காசனத்தின் மீது வீற்றிருப்பவரை (தேவனை) ஸ்தோத்தரிக்கின்றன.*

***வெளிப்படுத்தல் 4:11*** *வாசிக்கவும்*

*இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மீது வீற்றிருப்பவரை (தேவனை) ஸ்தோத்தரிக்கின்றனர்.*

*மக்கள் ஒருவரோடொருவர்* ***எவ்வாறு*** *அளவளாவுகின்றனர்?*

*யோவான் ஆவியில் பரலோகத்திற்குள் நுழைந்து, நான்கு ஜீவன்கள் மற்றும் இருபத்து நான்கு மூப்பர்கள் சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பவரை (தேவனை) ஸ்தோத்தரிக்கிறதை கவனித்துக் கேட்கிறார்.*

*இச்சம்பவம்* ***எங்கே*** *நடைபெற்றது?* ***வெளிப்படுத்தல் 1:9; 4:1*** *வாசிக்கவும்*

*பத்மு தீவிலும், பரலோகிலும்.*

*இச்சம்பவம்* ***எப்போது*** *நடைபெற்றது – இயேசு மாம்சமும் இரத்தமும் ஆகி, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரத்துக்கேறினதற்கு முன்னரா அல்லது பின்னரா?*
***வெளிப்படுத்தல் 1:17-18*** *வாசிக்கவும்*

*இயேசு மாம்சமும் இரத்தமும் ஆகி, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரலோகத்துக்கேறிய பின்னர்.*

*அது* ***ஏன்*** *எழுதப்பட்டது?*

*ஒரே மெய் தேவனை வெளிப்படுத்தவே – சர்வ வல்லமையுள்ள, எல்லாம் வல்ல, நித்தியமான, யாவும் அறிந்த, பரிசுத்தமான, ஒருவராய் ஆட்சி செய்கிற, யாவையும் படைத்த தேவனானவர் உண்மையுள்ளவரும், எல்லா ஸ்தோத்திரத்திற்கும், ஆராதனைக்கும் உகந்தவருமாவார். எந்நேரத்திலும் எச்சூழ்நிலையிலும், இயேசுவின் மூலம் (திறந்த வாசல்) நாம் பரலோகம் செல்லலாம், சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பவரை அணுகலாம் என எல்லா காலங்களிலும் உள்ள விசுவாசிகளை உற்சாகப்படுத்திடவுமே.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள்* ***எவை****?*

*சர்வ வல்லமையுள்ள, எல்லாம் வல்ல, நித்தியமான, யாவும் அறிந்த, பரிசுத்தமான, ஒருவராய் ஆட்சி செய்கிற, யாவையும் படைத்த தேவனானவர், உண்மையுள்ளவரும், எல்லா ஸ்தோத்திரத்திற்கும், ஆராதனைக்கும் உகந்தவருமாவார்.*

*அது நமக்கு இன்று* ***என்ன*** *அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*இயேசு தம்மைத்தாமே மாம்ச இரத்த பலியாக ஈந்ததை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, ஆவிக்குரிய பிரகாரமாக நாம் அவருடைய பிரசன்னத்திற்குள் நுழைந்து, எந்த நேரமும் பரலோகில் அவருடைய சிங்காசனத்தண்டைக்கு தைரியமாக வரலாம். போராட்டமான நேரங்களிலும், தனிமையிலும், உபத்திரவங்களிலும் கூட, தேவன் ஒப்பற்றவராய் ஆட்சி செய்து, எந்நேரத்திலும் நமக்கென்று இருப்பவராக தம்மைத்தாமே ஆக்குகிறார்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம்* ***என்ன****?*

*சர்வ வல்லமையுள்ள, எல்லாம் வல்ல, பரிசுத்தரான, ஒருவராய் ஆட்சி செய்கிற, யாவையும் படைத்த தேவனானவர், எல்லா ஸ்தோத்திரத்திற்கும், ஆராதனைக்கும் உகந்தவருமாவார். அடையாளபூர்வமாக இயேசுவே பரலோகத்திற்கு வழி, திறந்த வாசல்.*

## ***சாட்சி பகரவும்***

*தேவனுடைய தரிசனங்கள் தொகுதிகளிலிருந்து, தேவன் தங்களுடன் பேசியவற்றைக் குறித்து இரண்டு அல்லது மூன்று வரிகளில் பகிர்ந்திட ஒவ்வொருவரையும் கேட்கவும்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# தொகுதி 5: தேவன் இவ்வளவாய் அன்புகூருகிறார்

*அறிவே ஆற்றலாகும். அவருடைய அன்பின் வல்லமையை அறிதல்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவனுடைய அன்பை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி – தேவனுடைய அன்பு

*இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான சிருஷ்டிகராகிய தேவன், தொடர்பு கொள்கிற தேவன் என நாம் கற்றோம். தேவன் அன்புகூருகிறவரானபடியால் அவர் யாவற்றையும் அன்பினாலேயே செய்கிறார். தேவனுடைய இந்த அன்பானது நம் அறிவுக்கு அப்பாற்பட்டதான அன்பாகும். தேவனுடைய அன்பின் சில அம்சங்களை அவரது சரிதை - அவரது உண்மையான அன்பின் சரிதையான வேதாகமத்திலிருந்து ஆராய்வோம்.*

***1 கொரிந்தியர் 13:1-8*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் தேவனுடைய அன்பின் எந்த அம்சங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன என ஒவ்வொரு வசனமாக கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

***வசனம் 4*** *பொறுமை (கோபமின்றி நீண்ட நேரம் காத்திருத்தல்), தயவு, பொறாமைக் கொள்ளாது, தன்னைப் புகழாது, இறுமாப்பாய் இராது.*

***வசனம் 5*** *கடுமையாக நடக்காது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது.*

***வசனம் 6*** *தீங்கில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்.*

***வசனம் 7*** *மக்கள் மேலுள்ள நம்பிக்கையை இழக்காது, நம்புவதை நிறுத்தாது, நம்பிக்கையை இழக்காது, முயற்சியை கைவிடாது.*

***வசனம் 8*** *அன்பு ஒருக்காலும் தவறுவதில்லை. ஒருபோதும் முடிந்துபோவதில்லை.*

*இந்த அன்பின் மூலகாரணமானவர்* ***யார்? 1 யோவான் 4:7-10*** *வாசிக்கவும்*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் தேவனுடைய அன்பு எவ்வாறு நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*தேவன் நம்மில் அதிகமாக அன்புகூர்வதினால், நாம் அவர் மூலம் வாழும்பொருட்டு நம் தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி தம் குமாரனை நமக்காக மாம்சமும் இரத்தமுமான பலியாகும்படி அனுப்பினார்.*

*இப்பகுதிக்கு தவறான அர்த்தத்தைக் கொடுக்காதபடிக்கு உதவிட பின்வரும் கேள்விகளை இப்பகுதியிலிருந்து கேட்கவும்:*

*இப்பகுதியிலுள்ள மக்கள்* ***யார்? 1 யோவான் 4:7-10*** *வாசிக்கவும்*

*எழுத்தர் யோவான், விசுவாசிகள் (அன்பானோர்), இயேசு (தேவகுமாரன்), தேவன்.*

*பேசுகிறது **யார்**?*

*எழுத்தர் யோவான்.*

*இவர் **யாருடன்** பேசுகிறார்?*

*அக்காலத்திலும் மற்றும் எல்லா காலத்திலும் உள்ள விசுவாசிகளோடு யோவான் பேசுகிறார்.*

*மக்கள் ஒருவரோடொருவர் **எவ்வாறு** அளவளாவுகின்றனர்?*

*யோவான் ஒரு கடிதத்தை விசுவாசிகளுக்கு எழுதுகிறார்.*

*இச்சம்பவம் **எப்போது** நடைபெற்றது – இயேசு மாம்சமும் இரத்தமும் ஆகி, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரத்துக்கேறினதற்கு முன்னரா அல்லது பின்னரா?*

*இயேசு மாம்சத்திலும் இரத்தத்திலும் வந்து, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பரலோகத்துக்கேறின பின்னர்.*

*அது **ஏன்** எழுதப்பட்டது? **1 யோவான் 1:1-4** வாசிக்கவும்*

*எழுத்தர் யோவான், இயேசு மாம்சமும் இரத்தமுமாய் ஆகி சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கேறுவதை நேரில் கண்ட சாட்சி. விசுவாசிகளின் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி, இயேசுவின் இரத்த பலியை விசுவாசித்து, ஏற்றுக்கொள்பவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுத்தமாவார்கள் என யோவான் எழுதி சாட்சி பகருகின்றார்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள் **எவை**?*

*தேவன், அவரது முடிவில்லாத அன்பு, அவரது நித்தியமான தியாக பலி, மற்றும் கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், வருங்காலத்திலும் வார்த்தையினாலும், எண்ணத்தினாலும், கிரியையினாலும் நாம் தேவனுக்கும் ஒருவருக்கொருவருக்கும் எதிராக செய்த தீமையான காரியங்களின் மன்னிப்பு.*

*அது நமக்கு இன்று **என்ன** அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*இயேசுவின் மாம்சமும் இரத்தமுமான தியாக பலியை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, ஆவியில் நாம் சுத்தமாகி, தேவனுக்கும், ஒருவருக்கொருவருக்கும் எதிராக கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும் வார்த்தையினாலும், எண்ணத்தினாலும், கிரியையினாலும் செய்த தீமையான காரியங்கள் நமக்கு நித்தியமாய் மன்னிக்கப்படுகிறது. தேவனுடைய அன்பு முடிவில்லாதது. தேவனுடைய அன்பில் நாம் நம்பிக்கைக் கொள்ளலாம்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம் **என்ன**?*

*தேவன் அன்பாகவே இருக்கிறார், பரிபூரண அன்பு.*

## *சாட்சி பகரவும்*

*தங்கள் மீதுள்ள தேவனுடைய அன்பு முடிவில்லாதது என்பதை அறிகிறது என்ன அர்த்தத்தை அவர்களுக்கு கொடுக்கிறது என இரண்டு அல்லது மூன்று வரிகளில் பகிர்ந்துகொள்ளும்படி ஒவ்வொருவரையும் கேளுங்கள்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

# தொகுதி 6: பிதாவின் அன்பு

*தெய்வத்துவம் முழுமையும் இயேசுவில் நிறைந்திருக்கிறதும், அவர் மூலமாக எல்லாவற்றையும் தம்மோடு ஒப்புரவாக்கவும், பிதா பிரியமாயிருந்தார்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவனுடைய அன்பை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி

*தேவன் இருந்தவராகவும், இருக்கிறவராகவும், வரப்போகிறவராகவும், தம்மில் தாமே பூரண தொடர்புடையவராயிருக்கிறார். பிதா, குமாரனாகிய இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் முழுமையான ஒன்றாய், ஒன்றில் மூன்று ஆள்தத்துவமுடையவர்கள். தேவன் ஒருவரே. பிதாவின் அன்பை அவரது சரிதையான – அவரது உண்மையான அன்பின் சரிதையான வேதத்திலிருந்து நாம் ஆராய்வோம்.*

*பிதாவின் அன்பு மிகவும் மகத்தானதால், அவர் தம் குமாரனுக்கு யாவையும் அளிக்கிறார்.*

***கொலோசெயர் 1:19–20** வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பிதாவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*தெய்வத்துவத்தின் நிறைவை இயேசுவில் நமக்கு வெளிப்படுத்தப்படுவதில் பிதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். இயேசு மாம்சத்திலும் இரத்தத்திலும் தியாக பலியானதின் நிமித்தம் சிருஷ்டி அனைத்தும் அவரோடுகூட ஒப்புரவாகி, சமாதானம் பெறலாம். இயேசு இல்லாமல் பரிபூரண சமாதானம் இல்லை.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள் **எவை**?*

*தேவன் – அவரது அன்பு, இயேசுவின் மாம்சத்திலும் இரத்தத்திலுமான தியாக பலியில் வெளிப்படுத்தப்பட்ட அவரது நிறைவு. இயேசு இல்லாமல் சமாதானம் இல்லை.*

*அது நமக்கு இன்று **என்ன** அர்த்தம் உடையதாயிருக்கிறது? **கொலோசெயர் 1:21–22** வாசிக்கவும்*

*இயேசுவின் மாம்சத்திலும் இரத்தத்திலுமான தியாக பலியை நாம் ஏற்றுக்கொள்ளும்போது இனிமேல் நாம் தேவனுக்கு விரோதிகளாய் இருப்பதில்லை. இப்பொழுது நாம் தேவனோடுகூட நல்லிணக்கம் உடையவர்களாய், இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டோராக, தேவனோடு தொடர்புடையோராக, பரிசுத்தமும், பழுதற்றவர்களுமாய் தேவனுக்கு படைக்கப்பட்டவர்களாகவும் ஆகிறோம். தேவனுடைய பார்வையில் நாம் குற்றவாளிகளல்ல.*

***யோவான் 3:16-17*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பிதாவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*பிதாவின் அன்பு மிகவும் மகத்தானது. மாம்சத்திலும் இரத்தத்திலும் வந்து, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கேறின இயேசுவில் நமக்கு எல்லாவற்றையும் அவர் அருளினார். உலகை மீட்க தேவன் தம்மைத் தாமே அளித்தார். தேவனுக்கும் மக்களுக்கும் எதிராக நாம் வார்த்தையினாலும், எண்ணத்தினாலும், செய்கையினாலும் செய்த தீய காரியங்களுக்காக நித்திய மாம்ச இரத்த தியாகபலியானார்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள்* ***எவை****?*

*தேவனும் அவருடைய அன்பும். தீமை.*

*அது நமக்கு இன்று* ***என்ன*** *அர்த்தம் உடையதாயிருக்கிறது?* ***யோவான் 3:18*** *வாசிக்கவும்*

*நியாயத்தீர்ப்பிலிருந்தும் தண்டனையிலிருந்தும் நாம் என்றென்றும் காப்பாற்றப்பட்டிருக்கிறோம். நாம் இனிமேல் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை. நமக்கு நித்திய வாழ்வு உண்டு.*

***யோவான் 3:35*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பிதாவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*பிதாவின் அன்பு மிகவும் மகத்துவமுள்ளதால், அவர் குமாரனாகிய இயேசுவுக்கு யாவற்றையும் அளிக்கிறார்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள்* ***எவை****?*

*தேவன், அவரது அன்பு மற்றும் அவரது ஈகைக் குணம்.*

*அது நமக்கு இன்று* ***என்ன*** *அர்த்தம் உடையதாயிருக்கிறது?* ***யோவான் 3:36*** *வாசிக்கவும்*

*தேவனுடைய குமாரனாகிய இயேசுவை நம்புகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.*

***1 யோவான் 3:1*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பிதாவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*தேவன் நம்மில் அதிகமாய் அன்புகூருகிறதால் இயேசுவில் எல்லாவற்றையும் நமக்கு அருளியுள்ளார். நாம் அவருடைய பிள்ளைகள். அவர் நமது பிதா, தம் குமாரனில் அன்புகூர்ந்த அதே அளவு நம்மையும் நேசிக்கிறார்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள்* ***எவை****?*

*தேவன், அவரது அன்பு, மற்றும் இயேசுவின் மாம்ச இரத்த தியாகபலியை விசுவாசித்து ஏற்றுக்கொள்வோர் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள் ஆகின்றனர்.*

*அது நமக்கு இன்று* ***என்ன*** *அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*நாம் தேவனுடைய பிள்ளைகளாக, இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டோராய், அவருடைய குடும்பத்தில் அங்கமாக தத்தெடுக்கப்பட்டோராய், என்றென்றும் அவரது அன்பை பெறுகிறோம்.*

**கொலோசெயர் *1:12-14*** வாசிக்கவும்

இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பிதாவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*தம் குமாரனின் மாம்ச இரத்த தியாக பலியின் மூலம் இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான இயேசுவிற்கு உள்ள எல்லாவற்றையும் நாம் பெறும்படி நம்மை தகுதிபடுத்தும் அளவுக்கு பிதாவானவர் நம்மில் அன்புகூருகிறார். தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்துவில் நாம் வாரிசுகளாகிறோம்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள்* ***எவை****?*

*தேவன், அவரது அன்பு, அவரது ஈகை குணம் மற்றும் அவரது குமாரனின் நித்தியமான மாம்ச, இரத்த தியாக பலி.*

*அது நமக்கு இன்று* ***என்ன*** *அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான இயேசுவிற்கு உள்ள எல்லாவற்றையும் நாம் பெறுகிறோம். அந்தகார சக்திகளிலிருந்து நாம் விடுதலை பெற்றவர்களாயிருக்கிறோம். தேவனுடைய ராஜ்யமான அவரது ஒளியின் ராஜ்யத்தில், இயேசுவுடன் வாரீசுகளாகிறோம்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம்* ***என்ன****?*

*பிதாவின் அன்பு.*

## சாட்சி பகரவும்

*பிதா தங்கள் மீது எவ்வளவாய் அன்புகூருகிறார் என்பதை அறிகிறது என்ன அர்த்தத்தை அவர்களுக்கு கொடுக்கிறது என இரண்டு அல்லது மூன்று வரிகளில் பகிர்ந்துகொள்ளும்படி ஒவ்வொருவரையும் கேளுங்கள்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# தொகுதி 7: குமாரனின் அன்பு

*நாம் தேவனோடு அன்பினால் தொடர்பு கொள்ளும்படி, தேவன் அன்பில் தம்மைத்தாமே தனிப்பட்ட ஆள்தத்துவம் உடையவராக ஆக்கினார்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

### ஆராதனை

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி

*இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான தேவன் தம்மில்தாமே பூரண தொடர்புடையவராயிருக்கிறார். பிதா, குமாரனாகிய இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் முழுமையான ஒன்றாய், ஒன்றில் மூன்று ஆள்தத்துவமுடையவராய், ஒரே தேவனாய் இருக்கின்றனர். தேவனுடைய குமாரன் இயேசுவின் அன்பின் தொடர்பை நாம் ஆராய்வோம்.*

*இயேசுவின் அன்பு மிகவும் மேன்மையானதால், நமக்காக மாம்ச இரத்த தியாக பலியாகும்படி அவர் யாவற்றையும் விட்டு கொடுத்தார். ஆயினும், ஒவ்வொரு நாளும் அவரது அன்பை இன்னும் அதிகமதிகமாக தனிப்பட்ட முறையில் அறிவதினால், தேவனிடமிருந்தும் தேவனாகவும் இருக்கிற சகலமும் நிறைவான ஜீவன், அன்பு, சத்தியம் மற்றும் வல்லமையைப் பெற்றிட உதவுகிறது.*

***யோவான் 10:14-18** வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் இயேசுவின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*இயேசுவின் அன்பு மிகவும் மேன்மையானது. தன் ஜீவனை கொடுக்கவும், கொடாமலிருக்கவும் இயேசுவுக்கு வல்லமை உண்டு. ஆயினும் பிதாவின் சித்தபடி அவர் தன் ஜீவனைக் கொடுத்திட தேர்ந்தெடுக்கிறார். தேவன் இவ்வளவாய் அன்புகூருகிறதால், தம்மில் தாமே யாவற்றையும் நமக்கு அருளினார். இயேசு யாவற்றையும் விட்டுக் கொடுத்து, மாம்சமும் இரத்தமுமாவதை தேர்ந்தெடுத்து, சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறினார். தேவனுக்கும் மக்களுக்கும் எதிராக நாம் வார்த்தையினாலும், எண்ணத்தினாலும், செய்கையினாலும் செய்த தீய காரியங்களுக்காக, உலகை மீட்கும்பொருட்டு, நித்தியமான மாம்ச, இரத்த தியாக பலியாக அவர் தம்மைத் தாமே கொடுத்தார். இயேசு இன்றும் தம்மையும், தம் உயிர்த்தெழுந்த ஜீவன், அன்பு, சத்தியம், தீய ஆவிகள் மற்றும் நம் மாம்சீகத்தின்மீதும் தம் வல்லமையையும் அதிகாரத்தையும் தொடர்ந்து பொழிந்துகொண்டே இருக்கிறார். அவரே நமது நல்ல மேய்ப்பன்.*

## சாட்சி பகரவும்

*இயேசு அவர்களின் நல்ல மேய்ப்பர் என அவர்கள் அறிகிறது என்ன அர்த்தத்தை அவர்களுக்கு கொடுக்கிறது என இரண்டு அல்லது மூன்று வரிகளில் ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.*

***சங்கீதம்** 23 வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*நல்ல மேய்ப்பனாகிய இயேசு உங்களுக்கு செய்கிறவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*எனக்கு தேவைப்படும் எல்லாவற்றையும் இயேசு எப்போதும் தருகிறார்.*

*இளைப்பாறுதலையும் உணவையும் இயேசு எனக்கு தருகிறார்.*

*என்னை புத்துணர்வடைய செய்து, எனக்கு ஜீவத்தண்ணீரை இயேசு தருகிறார்.*

*என் ஆவி, மனம் மற்றும் சரீரத்தை இயேசு மீட்டு புதுப்பிக்கிறார்.*

*தம் நாம மகிமைக்காக, தம் நீதியையும் நியாயத்தையும் நான் அறியும்படிக்கு இயேசு என்னை வழிநடத்துகிறார்.*

*நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், எனக்கு பயமில்லை, ஏனெனில் இயேசு என்னோடிருக்கிறார்.*

*தம் அன்பினாலும், என்னோடுள்ள அவரது உறவினாலும், அவரது இறுதியான வல்லமை மற்றும் அதிகாரத்தினாலும் இயேசு என்னை ஆறுதல்படுத்துகிறார்.*

*என் பகைவர் அனைவரும் காணும்படியாக இயேசு எனக்கொரு விருந்தை ஆயத்தம் செய்கிறார். என்னை தமது மதிப்பிற்குரிய விருந்தினராக இயேசு ஆக்குகிறார்.*

*முடிவில்லாத தம்முடைய நிறைவினாலும் தேவனுடைய எல்லா நன்மையாலும் இயேசு என்னை அபிஷேகிக்கிறார்.*

*சந்தேகமின்றி என் ஜீவனுள்ள நாளெல்லாம், மாம்சத்திலும் இரத்தத்திலும் இருக்கும் இக்காலத்தில், தேவனுடைய கிருபை என்னைத் தொடரும். என்றென்றும் நான் தேவனோடு வாழுவேன்.*

*இப்பகுதியில் உள்ளவைகளில் இன்றும் அதேபோன்று இருப்பவைகள் **எவை**?*

*தன் ஆடுகளுக்காக தம்மைத்தாமே தொடர்ந்து கொடுக்கிற நல்ல மேய்ப்பன் இயேசு.*

*அது நமக்கு இன்று **என்ன** அர்த்தம் உடையதாயிருக்கிறது?*

*இயேசு யாராக இருக்கிறார் என்பதாலும், அவர் செய்தவற்றாலும், செய்கின்றவற்றாலும், செய்வேன் என வாக்குப்பண்ணினவற்றாலும் நாம் அவரில் இளைப்பாறிடலாம்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம் **என்ன**?*

*இயேசுவில் தேவன் தம்மையே முழுவதுமாய் நமக்கு அளிக்கிறார், ஏனெனில் அவர் அவ்வளவாய் அன்புகூருகிறார்.*

*இயேசுவில் தேவனின் அன்பு **எவ்வளவு** வலிமையானது? **ரோமர் 8:39** வாசிக்கவும்*

*இயேசுவில் நமக்கான தேவனுடைய அன்பு எல்லாவற்றையும் விட மேன்மையானதும் வலிமையானதுமாகும். நம் பெலவீனங்கள் மற்றும் இவ்வுலகின் தீமையும் இதில் அடங்கும்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

# தொகுதி 8: பரிசுத்த ஆவியானவரின் அன்பு

*ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள்! கேட்கிற எவனும் வா என்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவர்கள் ஜீவத்தண்ணீரை இலவசமாய் பெற்றுக் கொள்ளக்கடவர்கள்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவனுடைய அன்பை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி

*இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான தேவன், தம்மில்தாமே பூரண தொடர்புடையவராயிருக்கிறார். பிதா, குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியானவர் முழுமையான ஒன்றாய், ஒன்றில் மூன்று ஆள்தத்துவமுடையவராய், ஒரே தேவனாய் இருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் அன்பின் தொடர்பை நாம் ஆராய்வோம்.*

*தேவனுடைய அன்பு மிகவும் மேன்மையாது, நமது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் அன்பு ஒருபோதும் அவரைப்பற்றியது அல்ல. அதற்கு பதிலாக, அவர் வெளிப்படுத்துகிறவராகவும், நிச்சயப்படுத்துகிறவராகவும், மறுரூபப்படுத்துகிறவராகவும், நமக்குள் வாசம் செய்கிறதால் நாம் பிதாவின் அன்பையும், குமாரன் இயேசுவின் அன்பையும் தனிப்பட்ட விதத்தில், வல்லமையாக, நெருக்கமாக அனுபவிக்கிறோம்.*

***யாரைக்** குறித்து பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுத்து, மகிமையைக் கொண்டுவருகிறார்? **யோவான் 16:13-15** வாசிக்கவும்*

*இயேசு.*

*தேவனுடைய அன்பு நம் இருதயங்களுக்குள் தனிப்பட்ட விதத்தில், வல்லமையாக, நெருக்கமாக **எவ்வாறு** ஊற்றப்படுகிறது? **ரோமர் 5:5-8** வாசிக்கவும்*

*நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரால்.*

***ரோமர் 8:14-16** வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதப் பகுதியில் பரிசுத்த ஆவியானவரின் அன்பை பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*தேவனுடைய அன்பு மிகவும் மேன்மையானதால், இயேசுவையே இலவசமான ஈவாக நாம் பெற்றுக்கொள்ளுகையில் இயேசுவின் ஆவியும், தேவனின் ஆவியுமாகிய பரிசுத்த ஆவியானவரை நமக்குள்ளே பெறுகிறோம். நாம் தேவனின் பிள்ளைகள், தேவன் நமது அன்பான தகப்பனாவார்.*

*விசுவாசிகள் அனைவரும் 'தேவனுடைய குமாரர்' (ஆணும் பெண்ணும்) ஏனெனில் அவர்கள் அவருடைய ஆவியைப் பெறுகின்றனர். 'தேவனுடைய குமாரர்' என்னும் பதம் நாம் இப்போது சுவீகரிக்கும் தேவனோடுள்ள உறவு முறையை வெளிப்படுத்துகிறது. இந்த புத்திர சுவீகாரமானது சேஷ்ட புத்திரனுக்குரிய எல்லா சட்டப்பூர்வமான உரிமைகளும் உடைய ராஜரீக சேஷ்ட புத்திரனைப் போன்றது. எனவே தேவனுடைய ராஜ்யத்தின் ராஜாவாகிய இயேசுவோடுகூட நாம் இணையான வாரிசுகளாக ஆகிறோம்.*

## ***சாட்சி பகரவும்***

*தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் (ராஜரீக சேஷ்ட புத்திரர்) என அறிவது அவர்களுக்கு எவ்வாறு அர்த்தமாகிறது என இரண்டு அல்லது மூன்று வரிகளில் பகிர்ந்துகொள்ளும்படி ஒவ்வொருவரையும் கேளுங்கள்.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம்* ***என்ன****?*

*தேவன் இயேசுவில் நமக்கு தம்மைத்தாமே முழுவதுமாக அளிக்கிறார். தேவன் அதிகமாய் அன்புகூருகிறதால் தமது புத்திர சுவீகாரத்தின் ஆவியை அவர் நமக்கு அளிக்கிறார்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# *தொகுதி 9:* நான் இருக்கிற வண்ணமாகவே என்னை ஏற்றுக்கொள்ளுதல்

*இருக்கிறவராகவே இருப்பவரின் அன்பினால் கண்டுபிடிக்கப்பட்டு, இருக்கிற வண்ணமாகவே ஏற்றக்கொள்ளப்பட்டு, நித்தியத்திற்காகப் பிணைக்கப்பட்டு, நிறைவான வாழ்வுக்கு நான் என்றென்றுமாய் மாற்றப்பட்டுள்ளேன்.*


## ஆரம்ப ஜெபம்

ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.

## ஆராதனை

நான் இருக்கிற வண்ணமாகவே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன் என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.

## நான்கு அட்டைகள் பயிலரங்கு



***படி 1:*** ஒவ்வொருவரும் ஒரு வெற்று தாளை எடுத்து, அதை நான்கு துண்டுகளாக வெட்டவும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு உருப்படியையும் ஒவ்வொரு துண்டு அட்டையின் முன்பகுதியில் வரையவும்.

*அட்டை 1 = நான். அட்டை 2 = என் குடும்பம். அட்டை 3 = என் கல்வி. அட்டை 4 = என் கிராமம்.*

***படி 2:*** ஒவ்வொருவரும் தன்னைப்பற்றியும், அவர்களது குடும்பம், அவர்களது பள்ளி மற்றும் அவர்களது சமுதாயம் பற்றியும் ஒவ்வொரு துண்டு அட்டையின் பின் பகுதியில் எளிய சித்திரங்கள், வார்த்தைகள் கொண்டு விவரித்திட வேண்டும். அட்டைகளில் பெயர் எழுதக் கூடாது.

*அட்டை 1: என்னைப்பற்றி நான் எவ்வாறு உணர்கிறேன்? (சந்தோஷமான அல்லது சோகமான முகத்தை வரையவும்.) நான் நேசிக்கப்படுவதாக உணர்கிறேனா? என் சமுதாயத்தால் நான் ஏற்றுக்கொள்ளப்பட்டவனாக நான் உணர்கிறேனா? நான் எதில் சிறந்தவனாக உள்ளேன்? நான் என்ன செய்ய விரும்புகிறேன்? நான் விரும்பும் மிருகம் எது? எனக்கு விருப்பமான உணவு எது? என் கனவுகள் எவை? நான் எவற்றிற்கு பயப்படுகிறேன்?*

*அட்டை 2: என் குடும்பத்தில் இருப்பவர்கள் யார்? என் குடும்பத்தின் ஆரோக்கியம் என்ன? என் குடும்பம் எந்த கடவுள் மீது நம்பிக்கை கொண்டுள்ளது? என் மீது அதிகாரம் உடையவர்கள் எப்படிப்பட்டவர்கள்? (சந்தோஷமான அல்லது சோகமான முகத்தை வரையவும்.)*

*அட்டை 3: என் வாழ்க்கையைக் குறித்து நான் எவ்வாறு உணர்கிறேன்? (சந்தோஷமான அல்லது சோகமான முகத்தை வரையவும்.) நான் சிறு பிள்ளையாக இருந்தபோது கற்ற ஒரு காரியம் என்ன? இதை எனக்கு கற்றுகொடுத்தவர் எப்படிப்பட்டவராய் இருந்தார்? நான் விரும்பிப் படித்த பாடம் அல்லது தலைப்பு எது? படிக்க கடினமான பாடம் அல்லது தலைப்பு எது? படிக்க மிக இலகுவான பாடம் அல்லது தலைப்பு எது? எவ்விடங்களில் பாதுகாப்பற்ற நிலையை நான் உணருகிறேன்? எவ்விடங்களில் பாதுகாப்பை நான் உணர்கிறேன்?*

*அட்டை 4: நான் வாழும் இடத்தில் நான் விரும்புவது எது? நான் வாழும் இடத்தில் எனக்கு விருப்பம் இல்லாதது எது? நான் வாழும் இடத்திலுள்ள முதியோர் என்ன செய்கின்றனர்? முதியோர் எனக்கு எவ்வாறு உதவுகின்றனர்?*

***படி 3:*** ஒவ்வொருவரும் தங்கள் அட்டைகளில் மேற்கூறிய விபரங்களை நிறைவு செய்த பின்னர் அவற்றை உங்களிடம் தருகின்றனர். ஒரு தொகுப்புக்கு நான்கு அட்டைகள் என வைத்திடுங்கள்.

***படி 4:*** ஒவ்வொருவருக்கும் வேறொருவரின் நான்கு அட்டைத் தொகுப்பைக் கொடுங்கள். தனக்குக் கொடுக்கப்பட்ட அட்டைத் தொகுப்பு யாருடையதென எவரும் அறியாதபடி அனைவரின் அடையாளமும் இரகசியமாக இருக்க வேண்டும்.

***படி 5:*** ஒவ்வொருவராக தனக்குக் கொடுக்கப்பட்ட நான்கு அட்டைத் தொகுப்பை, குழுவுடன் பகிர்ந்துகொள்ளவும்.

## குழு கலந்தாலோசித்தல்

*ஒவ்வொரு அட்டைத் தொகுப்பின் முடிவையும் கலந்தாலோசிக்கவும்.*

*தன்னைப்பற்றியும் தன் சூழ்நிலையைப்பற்றியும் ஒவ்வொருவரும் உணர்கின்றதைப்பற்றி அவர்களுக்கிடையில் உள்ள மாதிரிகள் அல்லது தொடர்புகள்* ***என்ன****?*

*ஒவ்வொருவருக்கிடையிலும் உள்ள சில வித்தியாசங்கள்* ***என்ன****?*

*நாம் எல்லோருமே ஏற்றுக்கொள்ளப்பட விரும்புகிறோம். நாம் எல்லோருமே அன்புகூரப்பட விரும்புகிறோம். ஏற்றுக்கொள்ளப்படுதலையும் அன்பையும் நாம் பிறரிடம் நாடும்போது, அவர்களும் இச்சூழ்நிலையும் நம்மை கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் ஆகிறது.*

***ஆதியாகமம் 29:31-35*** *வாசிக்கவும்*

## குழு கலந்தாலோசித்தல்

*லேயாள் மற்றும் தேவனை பற்றி நீங்கள் கவனித்தவைகளை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

***வசனம் 31*** *லேயாளைப் பற்றி தேவன் அறிந்திருந்தது என்ன?*

*அவள் அன்புகூரப்படாதவளாயிருந்தாள்.*

***வசனம் 32*** *ஒரு ஆண் குழந்தையைப் பெறுவதின் விளைவாக என்ன நேரிடும் என லேயாள் நம்பினாள்?*

*தன் கணவன் தன்னில் அன்புகூருவார்.*

***வசனம் 33*** *லேயாளின் கணவன் அவள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றதின் விளைவாக அவளில் அன்புகூர்ந்தாரா?*

*இல்லை.*

***வசனம் 34*** *மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்ற பின்பு லேயாளின் கணவன் அவளில் அன்புகூர்ந்தாரா?*

*இல்லை.*

***வசனம் 35*** *நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்ற பின்பு லேயாள் என்ன சொன்னாள்?*

*இப்பொழுது நான் கர்த்தரைத் துதிப்பேன்.*

*அன்புகூரப்படவும் ஏற்றுக்கொள்ளப்படவும் நமக்கு இருக்கும் தேவையை தேவன் காண்கிறார். தேவன் தாம் லேயாளை எவ்வளவாய் அன்புகூருகிறார் என அவளுக்கு வெளிப்படுத்தும்படி ஒரு ஆண் குழந்தையைப் பெறவேண்டுமென அவளுடைய இதய வாஞ்சையை அளித்தார். தமது திட்டத்திலும் அவளுக்கு ஒரு இடத்தை தேவன் வைத்திருந்தார். மாம்சமும் இரத்தமுமாகிய தேவனாகிய இயேசு வந்த கோத்திரம், அவளுடைய நாலாவது மகன் மூலம் வந்த கோத்திரம்.*

*நாம் தேவனால் எவ்வளவாய் அன்புகூரப்படுகிறோம் என்றும், நாம் இருக்கிற வண்ணமாகவே எவ்வாறு அவர் ஏற்றுக்கொள்ளகிறாரென்றும், அவரது பார்வையில் நாம் எவ்வளவு அழகுள்ளவர்கள் என்றும், உலக சிருஷ்டிப்பின் முன்னரே தமது திட்டத்தில் பங்கு கொள்ளும்படி அவர் நம்மைத் தேர்ந்தெடுத்தாரென நாம் அறிந்து கொள்ளும் போதுதான், பிறரது அன்பையும் அங்கீகாரத்தையும் இனிமேலும் நாடாதவர்களாகி, நாம் உண்மையாகவே விடுதலைப் பெற்றவர்களாகிறோம். அவரது அன்பும் அங்கீகாரமும் போதுமானது என்ற யதார்த்தமான நிலையில் நாம் வாழ்கிறோம்.*

***ரோமர் 15:7*** *மற்றும்* ***அப்போஸ்தலர் 10:34*** *வாசிக்கவும்*

*இவ்வசனங்களிலிருந்து தேவனைப்பற்றி நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம்* ***என்ன****?*

*மனிதர் யாவரையம் அவர்கள் இருக்கிற வண்ணமாகவே தேவன் ஏற்றுக்கொள்கிறார். நான் இருக்கிற வண்ணமாகவே அவர் என்னை ஏற்றுக்கொள்கிறார்.*

***மத்தேயு 11:28****ல் இயேசு சொன்னார் "களைப்படைந்து மிகுந்த பாரம் சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு ஓய்வு அளிப்பேன்." (ERV)*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# தொகுதி 10: அடையாளம் – ஆவியில் பிறக்கிறது

*தேவன்: மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்த ஆவியானவர், மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்த யாவருக்காகவும் மாம்ச இரத்த தியாக பலியாவதினால், மாம்சமும் இரத்தமுமான அவர்களும் ஆவியில் பிறக்கலாம்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

### ஆராதனை

*நான் ஆவியினால் பிறந்துள்ளேன், நான் தேவனுடைய பிள்ளை என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி

*நாம் கற்றுக் கொண்டபடி, இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை பெற்றுக்கொள்ளும் எல்லா விசுவாசிகளும் தேவனுடைய ஆவியாகிய - பரிசுத்த ஆவியை நமக்குள் பெறுகிறோம். இது நாம் சுதந்தரித்துக் கொள்ளும் காலம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக (ராஜரீக சேஷ்ட புத்திரராக) இயேசுவோடு இணைந்த வாரிசுகளாக, தீமையினால் பாழடைந்துள்ள உலகமாகிய இப்பூமியில் தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்கிறோம்.*

*தேவன் நம்மில் அன்புகூருகிறபடியால், அவர் நம்மில் ஒருவராகத் தெரிந்துகொண்டார். மேலும் சரித்திரத்தில் அத்தருணத்திலே, இயேசு பரிசுத்த ஆவியானவரின் வித்தால் ஒரு பெண்ணின் மூலம் மாம்சமும் இரத்தமுமானதால், மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்திருக்கும் நாமும், அவருடைய பரிபூரண நித்திய மாம்ச இரத்த தியாக பலியை விசுவாசித்து, ஏற்றுக்கொள்வதின் மூலம் ஆவியினால் பிறக்கிறோம்.*

***யோவான் 1:12-13*** *வாசிக்கவும்*

*மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்த மனிதன், ஆவியில் ஏன் பிறக்க வேண்டுமென தேவனுடைய சரிதை - அவரது உண்மையான அன்பின் சரிதையாகிய வேதத்திலிருந்து நாம் ஆராய்வோம்.*

***1 கொரிந்தியர் 15:47-51*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேத பகுதியிலிருந்து முதல் மனிதன் (மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்தவன்) மற்றும் இரண்டாம் மனிதன் (மாம்சமும் இரத்தமுமான ஆவியிலான இயேசு) பற்றி நீங்கள் கவனித்தவைகளை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*முதல் மனிதன்* ***எதனால்*** *செய்யப்பட்டவன்?*

*மண்.*

*இயேசு தம்மையே மாம்ச இரத்த தியாக பலியாக்கினதை நாம் ஏற்றுக்கொள்ளும் முன்பு* ***யாருடைய*** *சாயல், உருவம் மற்றும் அடையாளத்தை உடையவர்களாய் நாம் இருக்கிறோம்?*

*முதல் மனிதன் - மண்ணினால் ஆன மனிதன்.*

*இயேசு தம்மையே மாம்ச இரத்த தியாக பலியாக்கினதை நாம் ஏற்றுக்கொள்ளும்போது* ***யாருடைய*** *சாயல், உருவம் மற்றும் அடையாளத்தை உடையவர்களாய் நாம் இருக்கிறோம்?*

*இரண்டாம் மனிதன் – பரலோகத்திலிருந்து வந்த கர்த்தராகிய இயேசு.*

*இது நாம் சுதந்தரித்துக் கொள்ளும் காலம். இயேசுவின் அடையாளத்தை நாம் பெற்றிருக்கிறோம். மாம்சமும் இரத்தமுமாகிய நாம், பரிசுத்த ஆவியானவரான அவருடைய ஆவியில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாக (ராஜரீக சேஷ்ட புத்திரராக), இயேசுவோடு இணைந்த வாரிசுகளாக, தீமையினால் பாழடைந்துள்ள உலகமாகிய இப்பூமியில் தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்கிறோம்.*

***1 கொரிந்தியர் 15:50–55*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இப்பகுதியிலிருந்து மண்ணினால் செய்யப்பட்ட மனிதனின் அடையாளத்தையும் (மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்தவன்) ஆவியிலான இயேசுவின் (மாம்சமும் இரத்தமுமானவர்) அடையாளத்தையும் பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்த மனிதனின் இயல்பும் அடையாளமும்* ***என்ன****?*

*பாழடிக்கப்பட்டு, நேர்மையற்று, அழிந்துபோகிற மற்றும் மரணத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிலை.*

*இயேசுவின் இயல்பும் அடையாளமும்* ***என்ன****?*

*ஒருபோதும் பாழடிக்கப்படாதவர், நேர்மையானவர், நித்தியமானவர், ஜீவனுக்கு விதிக்கப்பட்டவர்.*

*தீய சக்தியின் மோசடியை செரிமானம் செய்து, பங்குகொண்டு, அவனோடு ஒன்றாகி, நன்மை தீமை அறிவதையும் தேர்ந்தெடுத்ததின் மூலம், முதல் மனிதன் பாழாக்கப்பட்ட வித்தாகினான். அதன் விளைவாக, எல்லா மனிதரும் இந்த பாழடிக்கப்பட்ட இயல்போடு பிறக்கின்றனர். இரண்டாம் மனிதனான இயேசு, ஒருபோதும் பாழடிக்கப்படாத வித்தாகிய பரிசுத்த ஆவியானவராலாகிய வித்தினால், ஒரு பெண்ணிடத்தில் மாம்சமும் இரத்தமுமாகிப் பிறந்தார். இயேசுவே பரிபூரண மாம்ச இரத்த தியாக பலியானவர்.*

***ரோமர் 5:14–19*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதபகுதியிலிருந்து மண்ணினால் செய்யப்பட்ட மனிதனின் (மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்தவன்) விளைவுகளையும், ஆவியிலான இயேசுவின் (மாம்சமும் இரத்தமும் ஆனவர்) விளைவுகளையும் பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*முதல் மனிதனின் குற்றத்தால் ஏற்பட்ட விளைவு* ***என்ன****?*

***வசனம் 16*** *குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டான்.*

***வசனம் 17*** *மரணம் அரசாட்சி செய்தது.*

*தம்மை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இரண்டாம் மனிதன் தம்மைத்தாமே இலவசமான ஈவாக அளிப்பதின் விளைவு* ***என்ன****?*

***வசனம் 16*** *நீதிமானாக்கப்படுதல், குற்ற உணர்விலிருந்து விடுதலை.*

***வசனம் 17*** *இயேசுவில் ஜீவன் அரசாட்சி செய்கிறது.*

***கொலோசெயர் 2:13-15*** *வாசிக்கவும்*

*முதல் மனிதனின் குற்றத்தால் ஏற்பட்ட விளைவு* ***என்ன****?*

***வசனம் 13*** *தேவனுக்கும் சக மனிதருக்கும் எதிரான குற்றங்களில் மரித்து, அழிவுக்கேதுவான தன்னலமான மாம்ச இச்சைகளில் சிக்குண்டனர்.*

*தம்மை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இரண்டாம் மனிதன் தம்மைத்தாமே இலவசமான ஈவாக அளிப்பதன் விளைவு* ***என்ன****?*

***வசனம் 13*** *எல்லா குற்றங்களிலுமிருந்து நாம் மன்னிக்கப்பட்டிருப்பதால் பாழாக்குகிற தன்னலமான மாம்ச இச்சைகளின்மீது வெற்றி பெற்று உயிரடைகிறோம்.*

***வசனம் 14*** *இனிமேலும் குற்றவாளிகளாக தீர்க்கப்படுவதில்லை.*

***வசனம் 15*** *தோற்கடிக்கப்பட்டு இப்பொழுது வல்லமையற்ற கைதிகளாய் இருக்கும் எல்லா துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்கள் மீதும் வெற்றியடைகிறோம்.*

*சுவீகாரத்தைப் பெறுகிற நம் காலம் இதுவே. மரண தண்டனை, நியாயத்தீர்ப்பு மற்றும் குற்ற உணர்விலிருந்து விடுதலைப் பெற்று, நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நமது மாம்சீகம் மற்றும் இயேசுவின் அரசாட்சிக்கும் ஆளுகைக்கும் எதிராக நிற்கும் அனைத்து தீய ஆவிகள், அனைத்து அதிகாரங்களுக்கும் மேலாக நாம் இந்த வாழ்வில் அரசாட்சி செய்வோம். இனிமேலும் சாத்தானோ தீய ஆவிகளோ நம்மை குற்றவாளிகளாக தீர்ப்பதில்லை. ஏனெனில் இயேசு சிலுவையில் பெற்ற வெற்றியினால் அவர்களுடைய எல்லா வல்லமையும், ஆயுதங்களும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன.*

*தீமையினால் பழுதடைந்துள்ள இவ்வுலகில், மாம்சமும் இரத்தமுமான நாம், ஆவியினால் பிறந்து, இயேசுவின் வெற்றியால் உயிர்ப்பிக்கப்பட்டு வாழ்கிறோம்.*

*வருங்காலத்திலும் நமக்கு சுவீகாரம் உண்டு.*

***1 கொரிந்தியர் 15:20-23*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*இவ்வேதபகுதியிலிருந்து மண்ணினால் செய்யப்பட்ட மனிதனின் (மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்தவன்) விளைவுகளையும், ஆவியிலான இயேசுவின் (மாம்சமும் இரத்தமும் ஆனவர்) விளைவுகளையும் பற்றி நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசிக்கவும். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*மரணத்திலிருந்து உயிரோடெழுந்திருக்கிறவர்* ***யார்****?*

*இயேசு.*

*இயேசு தமது எல்லா மகிமையிலும் இவ்வுலகிற்கு திரும்பி வருகையில், ஒருபோதும் முதுமையடையாத, ஒருபோதும் நோயடையாத, ஒருபோதும் இளைத்துப்போகாத, குறைபாடற்ற சரீரங்களோடு மரணத்திலிருந்து உயிர்த்தெழுபவர்கள்* ***யார்****?*

*இயேசு தம்மைத்தாமே இலவசமான ஈவாக அளித்ததை, அவரது மாம்ச இரத்த தியாக பலியை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும். ஏனெனில் அவர்கள் ஆவியினால் பிறந்த தேவனுடைய பிள்ளைகள்.*

***வெளிப்படுத்தல் 1:18*** *வாசிக்கவும்*

*குறைபாடற்ற மாம்ச இரத்த தியாக பலியாகி, மரித்து, குறைபாடற்ற உயிர்த்தெழுந்த சரீரத்தில் உயிரடைந்து, பரலோகத்துக்கேறி, என்றென்றும் உயிரோடிருக்கிறவராக மரணத்திற்கும், நித்தியத்திற்கும் மேல் அதிகாரம் உடையவராக இருக்கும் ஆவியிலானவர்* ***யார்****?*

*இயேசு.*

***வெளிப்படுத்தல் 1:5-6*** *வாசிக்கவும்*

*உண்மையுள்ள சாட்சியும், உயிர்த்தெழுந்த முதற்பேறானவரும், எல்லாவற்றிற்கும் மேலான வல்லமையும், அனைவரையும் அரசாள்பவர்* ***யார்****?*

*இயேசு.*

***ஏன்*** *இயேசு நமக்காக இவற்றையெல்லாம் செய்தார்?*

*அவர் நம்மில் அன்புகூருகிறதால்.*

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியாகிய, தம்மையே இலவசமான ஈவாக அளித்ததை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்கையில், தேவனுடைய பிள்ளையாக ஆவியினால் பிறப்பதோடு, மேலும் நாம்* ***என்ன*** *ஆகிறோம்?*

*ராஜாக்களும் (சாத்தான், தீய ஆவிகள் மற்றும் நமது மாம்சீகத்தின்மீது ஆளுகை செய்கிறவர்களாய்) ஆசாரியர்களும் (தேவனோடும் பிற மக்களோடும் அன்பின் தொடர்பில்) ஆகிறோம்.*

*இயேசுவின் உயிர்த்தெழுதலே முதன் முதலான குறைபாடற்ற சரீர உயிர்த்தெழுதலானதால், தீமையினால் பழுதடைந்துள்ள உலகில் இப்பொழுது நாம் வெற்றியோடு வாழ்வது மட்டுமல்லாமல், முதுமையடையாத, இளைப்படையாத, ஒருபோதும் மரணமடையாத, குறைபாடற்ற உயிர்த்தெழுந்த சரீரத்தில், பழுதுபடாத ஒரு புதுப்பிக்கப்பட்ட உலகில், நித்திய நிலையில், வருங்கால நம்பிக்கையில் நாம் வாழலாம். இயேசு பூமிக்கு திரும்பி வரும்போது, இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியாகிய தம்மையே இலவசமாக ஈந்ததை ஏற்றுக்கொண்ட நாம், நமது குறைபாடற்ற உயிர்த்தெழுந்த சரீரத்தை சுதந்தரித்துக்கொள்வோம்.*

*சுவீகாரத்தைப் பெறுகிற நம் காலம் இதுவே. தேவன் அதிகமாக அன்புகூருகிறதால் பரிசுத்த ஆவியானவரின் வித்தின் மூலம் இயேசு மாம்சமும் இரத்தமுமாக வந்திட தீர்மானித்து ஒரு பெண்ணிடம் பிறந்தார். அவர் தம் சொந்த சிருஷ்டிப்பிற்குள்ளே வந்தார். மனிதனின் குற்றத்தின் விளைவாக, தேவனுடைய சிருஷ்டிப்பானது தீமையினால் சேதமடைந்தது. சமத்துவமின்மை, ஒடுக்குதல், தீமை மற்றும் மரணம் அரசாண்டது. தேவன் அதிகமாக அன்புகூர்கிறதால், இயேசு முதற்பேரான சுதந்தரவாளியான குமாரனாக வந்தார், இனி நாம் அனைவரும் மாம்ச இரத்தத்திலிருந்து ஆவியினால் பிறந்த குமாரர்களாகி, இப்பொழுதும் எப்பொழுதும் நம் சுவீகாரத்தை அடைந்திடலாம். அல்லேலூயா!*

*இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம்* ***என்ன****?*

*தேவன் அதிகமாக அன்புகூருகிறார் மற்றும் மாம்சத்திலும் இரத்தத்திலும் மரித்து, உயிர்த்தெழுந்த இயேசு வாழ்க்கை தேவனுடைய சாட்சியும் நிரூபணமுமாகும்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# தொகுதி 11: பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுதல்

*இரண்டு மனுஷீகத் தேவைகள்: ஏற்றுக்கொள்ளப்படும்படி விரும்புதல் மற்றும் அன்புகூரப்படும்படி விரும்புதல். பிரியமானவருக்குள் (மிகவும் நேசிக்கப்படும் இயேசுவுக்குள்) நாம் ஏற்றுக்கொள்ளப்படும்படி (விசேஷ மரியாதையோடு) தேவன் செய்தார்.*

## ஆரம்ப ஜெபம்

ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.

## ஆராதனை

நான் தேவனால் அன்புகூரப்பட்டு கிறிஸ்துவில் விசேஷ மரியாதையும் ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டுள்ளேன் என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.

## வேத ஆராய்ச்சி

நாம் கற்றுக் கொண்டபடி, இயேசு தம்மையே மாம்ச இரத்த தியாக பலியானதை ஏற்றுக்கொள்ளும் எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவராகிய தேவனுடைய ஆவியை தமக்குள் பெறுகின்றனர். சுவீகாரத்தைப் பெறுகிற நம் காலம் இதுவே. நாம் தேவனுடைய பிள்ளைகளாக (ராஜரீக சேஷ்ட புத்திரராக), இயேசுவோடு இணைந்த வாரிசுகளாக, தீமையினால் பாழடைந்துள்ள உலகமாகிய இப்பூமியில் தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்கிறோம்.

தேவன் நம்மில் அன்புகூருவதால், அவர் நம்மில் ஒருவராகிட தெரிந்துகொண்டார். சரித்திரத்தில் அத்தருணத்திலே, பரிசுத்த ஆவியானவரின் வித்தின் மூலம், இயேசு மாம்சமும் இரத்தமுமாக ஒரு பெண்ணிடம் பிறந்ததார். அதனால் மாம்சத்திலும் இரத்தத்திலும் பிறந்தவர்களாகிய நாமும், இயேசுவின் பரிபூரண நித்திய மாம்ச இரத்த தியாக பலியை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதின் மூலம் ஆவியினால் பிறக்கிறோம்.

தேவனுடைய சரிதையான அவரது உண்மையான அன்பின் சரிதையாகிய வேதத்திலிருந்து பிதாவின் அன்பு, ஆசீர்வாதம், சித்தம் (இதய விருப்பம்) மற்றும் நித்தியத்திற்கான மீட்பின் நோக்கம் பற்றி ஆராய்வோம்.

**எபேசியர் 1:3–14** வாசிக்கவும்

இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.

## குழு கலந்தாலோசித்தல்

நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.

தேவன் நமக்கு வெளிப்படுத்தியுள்ள அவருடைய விருப்பமும் திட்டமும் **என்ன? வசனங்கள் 9–10** வாசிக்கவும்

காலம் நிறைவடைகையில் பரலோகிலும் பூலோகிலும் உள்ளவைகள் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கும்.

இக்காலத்தில் நாம் ஏற்கெனவே பெற்றிருக்கும்படியாக, தேவன் நமக்கு (முற்காலத்தில்) கொடுத்தவை **எவை? வசனம் 3** வாசிக்கவும்

அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதமும்.

*இந்த ஆசீர்வாதம் **எங்குள்ளது**?*

*பரலோகத்திலுள்ளது.*

*இவை அனைத்தையும் பெற்றிட நாம் எவரில் அல்லது **யாரோடு** ஒன்றாய் இருக்க வேண்டும்?*

*கிறிஸ்து இயேசு.*

*கிறிஸ்து இக்காலத்தில் பரலோகில் அதிகாரமான இடத்தில் அமர்ந்திருப்பதைப் போல் நாமும் அமர்ந்துள்ளோம். இக்காலத்தில் கிறிஸ்துவைப் போல் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதமும் நமக்குண்டு. அடுத்த வசனங்கள் இவ்வாசீர்வாதங்களின் சில விளக்கங்களை வரிசைப்படுத்துகின்றன.*

*பிதாவாகிய தேவன் நமக்கு (முற்காலத்தில்) அளித்தபடி, நாம் கிறிஸ்துவுக்குள் (இக்காலத்தில்) **யாராய்** இருக்கிறோம்? உங்கள் பதிலை தனிப்பட்ட முறையில் அமைத்து 'நான்' என உங்கள் பதிலை ஆரம்பித்து எழுதவும். **வசனங்கள் 4-5** வாசிக்கவும்*

*உதாரணம்: நான் அன்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமும், குற்றமற்றவனும், குமாரன் என்னும் சுவீகாரத்தைப்பெற்று, பிரியமானவரால் (மிகவும் நேசிக்கப்படுபவரால்), என் பிதாவின் சித்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன் (நான் இருக்கிறவண்ணமாகவே). ஏனெனில் இதுவே அவருடைய இதய வாஞ்சையாய் உள்ளது.*

*இயேசு தேவனுடைய 'பிரியமான' குமாரன், பிதாவின் அன்பின் உச்ச பொருள். நாமும் அவரது அன்பின் 'குமாரராக' ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம் (நாம் இருக்கிற வண்ணமாகவே). நாம் இக்காலத்தில், பிதா மற்றும் குமாரனுக்கிடையில் இருக்கும் பூரணமான அன்பின் தொடர்பின் ஆவிக்குரிய யதார்த்தத்தில் வாழ்கிறோம். நாமே அவரது இதய வாஞ்சையாய் உள்ளோம்.*

*பிதாவாகிய தேவன் நமக்கு (முற்காலத்தில்) அளித்துள்ளபடி, நாம் கிறிஸ்துவுக்குள் (இக்காலத்தில்) **யாராய்** இருக்கிறோம்? உங்கள் பதிலை தனிப்பட்ட முறையில் அமைத்து 'நான்' என உங்கள் பதிலை ஆரம்பித்து எழுதவும். **வசனங்கள் 7-8** வாசிக்கவும்*

*உதாரணம்: நான், இயேசு தம்மையே மாம்ச இரத்த தியாக பலியாக்கினதின் மூலம், ஒருபோதும் முடிவில்லாத பரிபூரணமுமான தேவனுடைய தயவோடு நித்திய நித்தியமாக மீட்கப்பட்டு மன்னிக்கப்பட்டுள்ளேன்.*

*பிதாவாகிய தேவன் நமக்கு (முற்காலத்தில்) அளித்துள்ளபடி, நாம் கிறிஸ்துவுக்குள் (இக்காலத்தில்) **யாராய்** இருக்கிறோம்? உங்கள் பதிலை தனிப்பட்ட முறையில் அமைத்து 'நான்' என உங்கள் பதிலை ஆரம்பித்து எழுதவும். **வசனம் 11** வாசிக்கவும்*

*உதாரணம: நான் எனது சுவீகாரத்தைப் பெற்றுக்கொண்டேன் (இக்காலத்தில்), ஏனெனில் இது தேவனால் எனக்கு அளிக்கப்பட்டதும், அவரது இதய வாஞ்சையாகவும் இருக்கிறது.*

*பிதாவாகிய தேவன் நமக்கு (முற்காலத்தில்) அளித்துள்ளபடி, நாம் கிறிஸ்துவுக்குள் (இக்காலத்தில்) **யாராய்** இருக்கிறோம்? உங்கள் பதிலை தனிப்பட்ட முறையில் அமைத்து 'நான்' என உங்கள் பதிலை ஆரம்பித்து எழுதவும். **வசனங்கள் 13-14** வாசிக்கவும்*

*உதாரணம்: நான் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டு, என் சுவீகாரத்தின் நிறைவேறுதலின் உத்திரவாதத்தை பெற்றுள்ளேன். (இக்காலத்திலும் எதிர்காலத்திலும்).*

*கிறிஸ்து இக்காலத்தில் பரலோகில் அதிகாரமான இடத்தில் அமர்ந்திருப்பதைப் போல, நாமும் அமர்ந்துள்ளோம் என நினைவில் கொள்ளவும். இக்காலத்தில், கிறிஸ்துவைப் போல் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதமும் நமக்குண்டு.*

***எபேசியர் 1:21-23** வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*இக்காலத்திலும் வருங்காலத்திலும் இயேசுவுக்கு* ***எவ்வளவு*** *வல்லமையும் அதிகாரமும் உள்ளது?* ***வசனம் 21*** *வாசிக்கவும்*

*எல்லாத் துரைத்தனங்கள், வல்லமை, அதிகாரம், அரசாட்சி மற்றும் குறிப்பிட்ட எல்லாவற்றின் மீதும்.*

*இயேசுவின் நிறைவு ஆனவர்கள்* ***யார்****?* ***வசனம் 23*** *வாசிக்கவும்*

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை ஏற்றுக்கொண்ட எல்லா விசுவாசிகளும்.*

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை ஏற்றுக்கொண்ட எல்லா விசுவாசிகளின் நிறைவானவர்* ***யார்****?*

*கிறிஸ்து இயேசு.*

***எபேசியர் 2:4-8*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

*இக்காலத்தில் கிறிஸ்து இயேசுவில் நமக்கு* ***என்ன*** *உள்ளது?* ***வசனங்கள் 5-6*** *வாசிக்கவும்*

*நம்மை கிறிஸ்துவோடே கூட உயிர்ப்பித்தார். மாம்சீக இச்சைகள், சாத்தான் மற்றும் அனைத்து தீய ஆவிகளுக்கும் மேலாக கிறிஸ்துவின் வல்லமையிலும், அதிகாரத்திலும் நம்மை எழுப்பி, உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவும் செய்தார்.*

*தேவன் நம்மை* ***ஏன்*** *உயிர்ப்பித்து, கிறிஸ்துவின் வல்லமையிலும் அதிகாரத்திலும் நம்மை எழுப்பி, உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவும் செய்தார்?* ***வசனங்கள் 4-8*** *வாசிக்கவும்*

*தேவன் நம்மேல் கொண்டுள்ள மிகுதியான அன்பின் நிமித்தம். இவை எல்லாவற்றின் மூலம் தேவன் தமது முடிவில்லாத அன்பு, இரக்கம், பரிபூரண தயவு மற்றும் ஆசீர்வாதத்தின் செல்வங்களையும் நம்மிடம் வெளிப்படுத்திடலாம்.*

***எபேசியர் 1:15-19*** *வாசிக்கவும்*

*அப்போஸ்தலர் பவுல் பரிசுத்தவான்களுக்காக* ***என்ன*** *ஜெபம் பண்ணுகிறார்?*

***வசனம் 17*** *தேவனை இன்னும் அதிகமாக அறிந்து கொள்வதற்காக அவர் ஞானத்தின் ஆவியை அவர்களுக்கு கொடுக்கும்படி.*

***வசனம் 18*** *தேவனுடைய மகத்துவமான சுதந்தரமாகிய அவருடைய மாம்ச இரத்த தியாக பலியை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் அனைவரும் தேவனுடைய சத்தியத்தை இன்னும் அதிகமாக காணவும், நம்பிக்கையையும் ஆசீர்வாதங்களையும் அறியவும் (இக்காலத்திலும் வருங்காலத்திலும்) தேவன் அவர்களுடைய மனக்கண்களை திறந்திட வேண்டுமென.*

***வசனம் 19*** *அவரது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று அறிய.*

*இப்பகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம்* ***என்ன****?*

*தேவனுடைய அன்பு, வல்லமை மற்றும் பரிபூரணமான ஆசீர்வாதம் முடிவில்லாதது. அவர் என்னை தமது துதியும் மகிமையுமாய் காண்கிறார்.*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

# தொகுதி 12: உறவுகள்

*கருத்தரங்கில் கலந்துகொண்டவர்: 'திராட்சைச் செடி உறவைக் குறித்து கற்றேன். இயேசுவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நேரமும், பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணிப்பதும் எனக்கு அதிமுக்கியமானதாகும்.'*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

### ஆராதனை

*இயேசுவோடு ஒன்றாயிருத்தல் அல்லது இயேசுவோடு திராட்சைச் செடி, கொடியின் உறவு அல்லது இயேசுவின் அன்பில் வாழுதலை பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

### கதை

*ஒரு பெரிய திராட்சைச் செடியின் ஒரு கொடியாக நீங்கள் உங்களை கற்பனை செய்துகொள்ளுங்கள்.*

*திராட்சைச் செடியின் முக்கியத் தண்டோடு நீங்கள் இணைக்கப்பட்டு, தோட்டக்காரரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளீர்கள்.*

*நீங்கள் செய்வதெல்லாம் வெறுமனே தொங்கிக்கொண்டிருப்பதே. வேறொன்றுமில்லை. முக்கியத் தண்டிலிருந்து தொங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.*

*நீங்கள் இப்போது முக்கியத் தண்டோடு இணைந்து தொங்கிக்கொண்டிருப்பதால், இயல்பாகவே வேரிலிருந்து, முக்கியத் தண்டின் வழியாக செடியின் அனைத்து நன்மையும் உங்களுக்குள் பாய்கிறது. நீர், ஊட்ட சத்து மற்றும் செடியிலிருந்து எல்லாமே உங்களுக்குள் பாய்கிறது.*

*நீங்கள் செய்வதெல்லாம் செடியோடுகூட இணைந்து தொங்கிக்கொண்டிருந்து, அதனுடைய நன்மையைப் பெற்றுக்கொள்வதே.*

*ஒரு நாள், ஒரு 'கூச்ச' உணர்வை நீங்கள் உணர்கிறீர்கள். நீங்கள் வளர்ந்துவிட்டதை நீங்கள் கண்டறிகிறீர்கள்.*

*சிறு சிறு திராட்சைக் கொத்துகள் உருவாகின்றன. (அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்).*

*சூரியன் ஒளிர்ந்து, மழை உன் மேல் பொழிகையில், உனக்குள்ளாக திராட்சைச் செடியின் ஜீவ தண்ணீரும், ஊட்ட சத்தும் மென்மையாகப் பாய்கிறது. இது எப்படி நடைபெறுகிறது? நீங்கள் ஏதும் செய்யவில்லை!*

*நீங்கள் செய்வதெல்லாம் திராட்சைச் செடியோடு இணைந்து தொங்கிக்கொண்டிருந்து, அதன் நன்மையைப் பெற்றுக்கொள்வதே.*

*அதுவே தோட்டக்காரரின் சித்தமாகும்.*

*இயற்கையில், நீர் மேலிருந்து கீழாக, மழை, ஆறுகள் மற்றும் குட்டைகளுக்கு வழிந்தோடும். திராட்சைக் கொடி வாழ்வதற்கு நீர் தேவையாயிருக்கிறது. நீர் இல்லையெனில் அது மாண்டுவிடும். நீரைப்பெறுவதற்கு கிளையானது முக்கியத் தண்டிலிருந்து பருக வேண்டும் – முக்கியத் தண்டிலிருந்து பெற வேண்டும். வாழ்வதற்கும் கனி கொடுப்பதற்கும் கிளையானது நீர் பருக வேண்டும்.*

*தேவன் யாவற்றையும் சிருஷ்டித்ததால், இயற்கையைப் போலவே ஆன்மீகத்திலும் உள்ளது.*


*ஆன்மீகத்தில், ஜீவத் தண்ணீர் மேலிருந்து கீழ், தேவனுடைய சிங்காசனத்திலிருந்து இயேசுவின் வழியாக கிளைகளுக்குப் பாய்கிறது. கிளைகள் மழையிலிருந்து நீரைப் பருகுவதில்லை - நீரானது மண்ணிற்குள் செல்கிறது. கிளைகள் முக்கியத் தண்டிலிருந்து நீரைப் பருகி, வேர் மற்றும் முக்கியத்தண்டிலிருந்து எல்லா நன்மையையும் பெற்றுக்கொள்கின்றன.*

***யோவான் 15:1-8*** *வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள்.*
*உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*



*தோட்டக்காரர்* ***யார்****?*

*பிதாவாகிய தேவன்.*

*திராட்சைச் செடியின் முக்கியத் தண்டு* ***யார்****?*

*இயேசு.*

*திராட்சைச் செடியின் முக்கியத் தண்டின் கிளை* ***யார்****?*

*நான்.*

*நிலைத்திருத்தல் என்றால்* ***என்ன****?*

*இயேசு தம்மில் நிலைத்திருக்கக் கூறுகிறார். நிலைத்திருத்தல் என்பது தங்கியிருத்தல் (ஒரு இடத்தில், நிலையில், தொடர்பில் மற்றும் எதிர்பார்ப்பில்): தொடர்தல், இருத்தல், சகித்தல், ஆஜராகுதல், அமர்ந்திருத்தல் அல்லது நிற்றல்.*

*நான்* ***எப்படி*** *நிலைத்திருக்க முடியும்?*

*உங்கள் பணிப்புத்தகத்தில் உங்கள் பதிலை எழுதுங்கள்.*

*இயற்கையில் வாழ்வதற்கும், கனி கொடுப்பதற்கும் கிளையானது ஊட்ட சத்து அல்லது உணவு உட்கொள்ள வேண்டும்.*

***யோவான் 4:27-38*** *வாசிக்கவும்*

## சூழ்நிலை

*இந்த வேதபகுதியில் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு பெண்ணோடு இயேசு பேசிக் கொண்டிருக்கிறார். கடந்த இந்த காலக் கட்டத்தில் சமாரியர்களோடு யூதர்கள் பேசுவதில்லை, முக்கியமாக தன் சொந்த மக்களாலே ஒதுக்கப்பட்ட ஒரு பெண்ணோடு பேசுவதில்லை. ஆனால் இயேசு (மாம்சத்திலும் இரத்தத்திலும் யூதா கோத்திரத்தை சார்ந்தவர்) சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட இப்பெண்ணை அணுகி, ஜீவத் தண்ணீர் பற்றி (தேவனுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியைப்பற்றி) அவளோடு பேசி, ஜீவத் தண்ணீரின் மூலக்காரணராகிய தன்னை அவளுக்கு வெளிப்படுத்துகிறார். இயேசுவின் சீஷர்கள் திரும்பி வந்தபோது, தனது உணவு எதுவென்றும், விளை நிலத்தைப்பற்றியும் அவர்களுக்குக் கற்பிக்கிறார்.*

*சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட பெண்ணை அணுகி, தான் யாரென வெளிப்படுத்தி, தம்மை இனிமேல் அறியப்போகும் மக்களான விளை நிலத்தைப்பற்றி பேசுவதற்கும் இடையில் தனது உணவு எது என இயேசு வெளிப்படுத்துகிறார்.*

*தன்னை தாங்கும் உணவென இயேசு **எதை** கூறுகிறார்?*

*பிதாவின் சித்தத்தை செய்து, எதை செய்ய அனுப்பப்பட்டரோ அதை செய்து முடிப்பதே.*

***தேவன் யாவற்றையும் சிருஷ்டித்ததால், இயற்கையைப் போலவே ஆன்மீகத்திலும் உள்ளது.***

*ஆன்மீகத்தில், பிதாவின் சித்தத்திற்கு நாம் நம்மை அர்ப்பணித்து, அவருடைய பிரசன்னத்தில், ஆராதனையிலும், அவரது வார்த்தையிலும் அவரோடு நேரம் செலவழிக்கையில், அவரது அனைத்து நன்மைகளையும் பெற்று, அவரது ஆவியினால் ஒவ்வொரு நாளும் அதிகமதிகமாக மறுரூபப்படுத்தப்படுவோம்.*

*பிதாவின் சித்தத்திற்கு நாம் நம்மை அர்ப்பணித்து, இயேசுவிடமிருந்து பெறுகையில் **யாருடைய** சாயலில் நாம் மறுரூபமாக்கப்படுகின்றோம்? **2 கொரிந்தியர் 3:17-18** வாசிக்கவும்*

*இயேசு.*

*நம் பிதாவின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணித்து, நாம் ஜீவத்தண்ணீரைப் பருகினால் **என்ன** நடக்கும் என இயேசு பறைசாற்றுகிறார்?*

***யோவான் 15:8*** *வாசிக்கவும்*

*கனி நிச்சயமாக உண்டு. தேவன் யாவற்றையும் சிருஷ்டித்ததால், இயற்கையைப் போலவே ஆன்மீகத்திலும் உள்ளது.*

*நம் பிதாவின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணித்து, அவரது பிரசன்னத்தில் அனுதினமும் பருகினால், நாம் கிறிஸ்துவைப்போலாகிட பரிசுத்த ஆவியானவர் நம்மை மாற்றுவார். அவரது குணாதிசயம் நமது குணாதிசயமாகிறது. இயேசு என்னும் மரமானது இயேசு என்னும் கனியைக் கொடுக்கிறது. ஆவியின் கனி.*

*பிதாவாகிய தேவனின் சித்தத்திற்கு அர்ப்பணிக்கும்போது நாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய கனி மற்றும் தெய்வீக இயல்பு அல்லது இயேசுவின் குணாதிசயங்கள் **யாவை**? **கலாத்தியர் 5:22-23** வாசிக்கவும்*

*அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை அடக்கம்.*

*கனியைக் உற்பத்தி செய்கிறவர் **யார்**?*

*பிதாவாகிய தேவனான தோட்டக்காரர், தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், பரிசுத்த ஆவியானவரால்.*

*தேவன் நம்மில் எவ்வளவாய் அன்புகூருகிறார் என்னும் வெளிப்பாடு நமக்கு உண்டாகி, அவருடைய பிரசன்னத்தில் பிதாவின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணித்திருக்கையில், அவர் தம்மை நமக்கு இன்னும் அதிகமாய் வெளிப்படுத்துவார். ஏனெனில் அதுவே அவரது சித்தமாகும், மற்றும் நாம் தேவனுடைய நிறைவினால் நிறைந்திடுவோம். நாம் அவருடைய பிரசன்னத்தில் அனுதினமும் இருந்து, இயேசுவிடமிருந்து பெற்று, நம் பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணிக்கையில், அவர் நம்மை மாற்றுவார், இதுவே அவருடைய சித்தமாகும்.*

*இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம் **என்ன**?*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

# தொகுதி 13: உறவுகள் – பிறரை அவர்கள் இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளுதல்

*ஒப்புரவாகுதல் (சமரசத்துக்குள் கொண்டுவருதல்). மீட்டெடுத்தல் (ஆரோக்கியம், நலம் மற்றும் சுறுசுறுப்பான நிலைக்கு மறுபடியும் கொண்டுவருதல்). புதுப்பித்தல் (உயிரூட்டி, செயலூக்கம் கொடுத்தல்).*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவனுடைய அன்பையும் அவரது மறுரூபப்படுத்தும் வல்லமையையும் பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## பத்து விதைகள் – குழு நடைமுறைப் பயிற்சி

*நாம் கற்றது போல், நமக்குள்ள அதிமுக்கியமான உறவு தேவனோடு உள்ளதேயாகும். நாம் நமது பிதாவின் சித்தததிற்கு நம்மை அர்ப்பணித்து, அவரோடு நேரம் செலவளித்து, அவரது எல்லா நன்மைகளையும் பெறுகிறவர்களாயிருந்தால், தேவன் நம்மை அனுதினமும் இயேசுவின் குணாதிசயமுடையவர்களாய் மாற்றுவார்.*

*நமது உணர்ச்சிகள், நாம் என்ன நினைக்கிறோம், பிறர் நம்மை எவ்வாறு நடத்துகின்றனர், மற்றும் நாம் பிறரை எவ்வாறு நடத்துகிறோம் என்பதைப்பற்றி தேவன் கரிசனை உள்ளவராய் இருக்கிறார்.*

## குழு நடைமுறைப் பயிற்சி

*ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் வட்டமாக உட்காரவும். அனைவரும் காணும்படி 10 விதைகள் பணித்தாளை (தேவனுடைய ராஜ்ய நிகழ்ச்சி கையேடு பக்கம் 45யை ஒரு நகல் எடுக்கவும்) வட்டத்தின் நடுவில் வைக்கவும். பணித்தாளின் பக்கத்தில் 10 அரிசி அல்லது கடலை அல்லது கிடைக்கக்கூடிய ஏதாவது 10 விதைகளை வைத்திடுங்கள். உங்கள் வட்டத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையே உங்கள் குழுவில் எண். மூன்று முதல் பன்னிரெண்டு நபர்கள் வரை இருக்கலாம். 12 பேர்களுக்கும் மேலிருந்தால் இரண்டு குழுக்களாக அமைக்கலாம். 24 பேர்களுக்கும் மேலிருந்தால் மூன்று குழுக்களாக அமைக்கலாம். ஒவ்வொரு குழுவும் 10 விதைகளையும் 10 விதைகள் பணித்தாளையும் குழுவின் நடுவில் வைத்திருக்க வேண்டும்.*

*ஒவ்வொரு நபரும் - ஒவ்வொருவராக - குழுவிடம் பேச தருணம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் சமஉரிமையோடு, சமமான முக்கியத்துவம் உடையோராயும் உள்ளனர். ஒவ்வொருவரும் குழுவின் முக்கியத்துவம் வாய்ந்தவராக பணி செய்கின்றனர். தங்கள் சமுதாயம், பணித்தாளின் எப்பத்தியில் தங்களைக் காண்பதாக தாங்கள் நம்புவதை தங்கள் குழுவோடு பகிர்ந்துகொள்கின்றனர். தங்கள் சமுதாயம் தங்களை எந்த மதிப்பும் அற்றவர்களாகவோ, சொற்ப மதிப்புள்ளவர்களாகவோ அல்லது மிகுதியான மதிப்புள்ளவர்களாகவோ காணும்.*

*தங்கள் சமுதாயம் தங்களை எவ்வாறு காண்கின்றது என்பதில் கேவலம் ஏதும் இல்லை என புரிந்துகொள்வது அதி முக்கியமானதாகும். ஒரு மனிதனை சமுதாயம் எவ்வாறு காண்கின்றது என்பது அநேக காரியங்களின் விளைவாகும், அவைகளில் பெரும்பாலானவை அம்மனிதனில் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். சரியான விடையானது: சமுதாயம் உங்களை காண்பதை நீங்கள் எப்படி நம்புகிறீர்கள் என்பதே.*

*தங்கள் சமுதாயம் தங்களை எப்பத்தியில் காண்கிறது (எந்த மதிப்பும் அற்றவர்களாகவோ, சொற்ப மதிப்புள்ளவர்களாகவோ அல்லது மிகுதியான மதிப்புள்ளவர்களாகவோ) என அவர்கள் நம்புவதாக ஒவ்வொருவரும் பகிர்ந்து கொண்டபின்பு, தம் குழு கண்டறிந்தவைகளை 10 விதைகளையும் வைத்து, எப்படி தெரிந்துகொள்ளப்பட்ட பத்திகளில் குறித்துக் காட்டுவது என ஆலோசிக்கவும். எல்லா 10 விதைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். 10 விதைகளும் முழு குழுவையும் குறிக்கும்.*

*உதாரணம் 1: 8 பேர்கள் கொண்ட ஒரு குழுவில், 5 பேர்கள் தங்கள் சமுதாயம் தங்களை எந்த மதிப்பும் அற்றவர்களாகவும், 2 பேர்கள் தங்கள் சமுதாயம் தங்களை சொற்ப மதிப்புள்ளவர்களாகவும், 1 நபர் தன்னை தன் சமுதாயம் மிகுந்த மதிப்புள்ளவராகவும் காண்பதாக எண்ணினால், 7 விதைகள் எந்த மதிப்பும் அற்ற பத்தியிலும், 2 விதைகள் சொற்ப மதிப்பு பத்தியிலும், 1 விதை மிகுதியான மதிப்பு பத்தியிலுமாக 10 விதைகளும் வைக்கப்பட வேண்டும்.*

*உதாரணம் 2: 6 பேர்கள் கொண்ட ஒரு குழுவில், 3 பேர்கள் தங்கள் சமுதாயம் தங்களை எந்த மதிப்பும் அற்றவர்களாகவும், 3 பேர்கள் தங்கள் சமுதாயம் தங்களை சொற்ப மதிப்புள்ளவர்களாகவும், 0 நபர் தன்னை சமுதாயம் மிகுந்த மதிப்புள்ளவராகவும் காண்பதாக எண்ணினால், 5 விதைகள் எந்த மதிப்பும் அற்ற பத்தியிலும், 5 விதைகள் சொற்ப மதிப்பு பத்தியிலும், 0 விதை மிகுதியான மதிப்பு பத்தியிலுமாக 10 விதைகளும் வைக்கப்பட வேண்டும்.*

## குழு கலந்தாலோசித்தல்

*நீங்கள் கவனித்தவற்றை கலந்தாலோசியுங்கள். உங்கள் பதில்களை துண்டு பிரதிகளில் எழுதுங்கள்.*

***லூக்கா 8:43-55** வாசிக்கவும்*

*இவ்வேதப் பகுதியை தியானித்து மறுபடியும் அநேக தடவை வாசிக்கவும்.*

## குழு கலந்தாலோசித்தல்

***வசனங்கள் 43-44**ல் இயேசுவின் தொடுதலால் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்ணுக்கு **என்ன** சம்பவித்தது?*

*அவள் குணமாக்கப்பட்டாள் (சரீரத்தில்).*

***வசனம் 45**ல் இயேசு **என்ன** கூறினார்?*

*என்னைத் தொட்டது யார்?*

*என்னைத் தொட்டது எது என இயேசு கூறாமல் என்னைத் தொட்டது யார் என்றார். யார் என்பது ஒரு நபரைக் குறிக்கிறது. அவளைத் தேடும்படி நின்று தம் நேரத்தையும், கவனத்தையும் கொடுத்து இயேசு அவளை மதித்து, அவளுக்கு மரியாதையளிக்கிறார். அவரது குணமளிக்கும் வல்லமையை அவள் ஏற்கெனவே பெற்றுவிட்டாள். உலகத்தின் பார்வையில் ஒரு முக்கியமான மனிதனின் மரித்துக் கொண்டிருக்கும் சிறுபெண்ணை மீட்கும்படி இயேசு சென்று கொண்டிருந்தார் என்பதை நினைவில் கொள்ளவும்.*

***வசனம் 47**ல் அப்பெண் **என்ன** செய்தாள்?*

*தான் மறைந்து கொள்ள முடியாததால், அவள் முன் வந்து, இயேசுவின் முன்பாகப் பணிந்து, இயேசுவின் ஒரு தொடுதலின் மூலம் குணமடைந்ததை சாட்சி பகர்ந்தாள்.*

*இயேசு சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்ணை மிகுதியான மதிப்பிற்குரியவளாகவும், சர்வ வல்லமையுள்ள தேவனின் சாயலால் சிருஷ்டிக்கப்பட்டவளாயும் அங்கீகரித்ததோடல்லாமல், இயேசுவிடமிருந்து வந்த ஒரே ஒரு தொடுதலினால், முழு சமுதாயமும், சீஷர்களும், இயேசுவும்கூட, இப்பொழுது அப்பெண் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.*

*அவளுக்கொரு இடமுண்டு. அவளுக்கொரு குரல் உண்டு. அவள் மதிப்பிற்குரிய ஒரு நபர். அவள் முக்கியத்துவம் வாய்ந்தவள்.*

***வசனம்** 48ல் தம் சீஷர்கள் மற்றும் சமுதாயம் முழுவதுக்கும் முன்பாக இயேசு அப்பெண்ணை **எப்படி** அழைக்கிறார்?*

*தேவனுடைய மகள் அல்லது பிள்ளை.*

*இயேசுவிடமிருந்து வந்த ஒரு தொடுதலால் பூரணமான முழுமை ஏற்படுகிறது – சரீரப் பிரகாரமாகவும், மனதளவிலும், ஆவிக்குரிய பிரகாரமாகவும். அவளுக்கொரு இடமும், குரலும், தேவனுடைய பிள்ளை என்னும் மறுசீரமைக்கப்பட்ட அடையாளமும் உண்டு.*

*10 விதைகள் நடைமுறைப் பயிற்சிக்குத் திரும்புவோம்.*

*சமுதாயம் தங்களை மதிப்பு அற்றவர்கள் அல்லது சொற்ப மதிப்புள்ளவர்கள் என காண்கிறது என நம்பும் மக்கள், சமுதாயம் தங்களை மிகுதியான மதிப்புள்ளவர்களாக காண்கிறது என நம்பும்படி நாம் அவர்களை **எவ்வாறு** வலுபடுத்திடலாம்?*

1. *அவர்களுக்கு மரியாதைக் கொடுத்து, சமுதாயத்தில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.*
2. *சமுதாயத்தில் அவர்கள் கலந்துக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒரு இடம், பங்கு, மற்றும் வாய்ப்பை அளித்திடுங்கள்.*
3. *தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய மகத்துவங்களைக் குறித்து பேசிடவும், சாட்சி பகரவும், ஒரு வாய்ப்பை அவர்களுக்கு அளித்திடுங்கள்.*
4. *தங்கள் வரங்களை கண்டுகொள்ளவும் (ஒவ்வொருவருக்கும் ஒரு வரமாவது உண்டு) அவற்றை பயன்படுத்திடவும் வாய்ப்பு அளித்திடுங்கள்.*

*இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம் **என்ன**?*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

# தொகுதி 14: உறவுகள் – சமத்துவம்

*'உறவுகள் சமமாக மறுசீரமைக்கப்பட்டு - இயேசுவில் சமமாகுதல்...சந்திக்கப்பட்டதும் சந்திக்கப்படாததுமான எல்லா சமுதாயத்திற்கும் தேவையான செய்தி.' கருத்தரங்கில் கலந்துகொண்டவர்*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவனுடைய அன்பையும், குணப்படுத்தும் வல்லமையையும் பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

*தேவன் மனிதனையும் மனுஷியையும் எவ்வாறு சமமாகக் காண்கிறார் என்னும் சில அம்சங்களை அவரது சரிதையாகிய, அவரது உண்மையான அன்பின் சரிதையாகிய, வேதத்திலிருந்து நாம் ஆராய்வோம்.*

*ஆணும் பெண்ணும் உள்ளடங்கின தம் சிருஷ்டிப்பின் மீது தேவன் **என்ன** பறைசாற்றினார்? **ஆதியாகமம் 1:31** வாசிக்கவும்*

*அது நல்லதாக இருந்தது.*

*தேவனுடைய ராஜ்யத்தில் உள்ள தொடர்புகளை, தீமையினால் பழுதடைந்திருக்கும் உலகில் உள்ள வாழ்க்கையில் புரிந்துகொள்ள, ஆரம்பத்திற்கு நாம் திரும்பி செல்ல வேண்டியதாய் இருக்கிறது. **ஆதியாகமம் 1:27–28** வாசிக்கவும்*

*தேவன் மனிதனை **யாருடைய** சாயலில் சிருஷ்டித்தார்?*

*தேவனுடைய சாயலில் சிருஷ்டித்தார்.*

*தேவன் பெண்ணை **யாருடைய** சாயலில் சிருஷ்டித்தார்?*

*தேவனுடைய சாயலில் சிருஷ்டித்தார்.*

*தேவன் **யாரை** சமமாக ஆசீர்வதித்தார்?*

*ஆணையும் பெண்ணையும்.*

*பூமி முழுவதின் மேலும் சமமான ஆளுகையை (ஆளும் அதிகாரம்) தேவன் **யாருக்குக்** கொடுத்தார்?*

*ஆணுக்கும் பெண்ணுக்கும்.*

***ஆதியாகமம் 2:18–20** வாசிக்கவும்*


*இவ்வசனத்தில் தேவன் பெண்ணை ஆணுக்கு இணையான உதவியாளராகக் குறிப்பிடுகிறார். அதாவது தன்னுடன் கூட வருகிற, ஒரே விதமான மாம்சம் உடையவர், அதே வேளையில் வித்தியாசங்களும் உடைய ஒருவர் என அர்த்தங் கொள்கிறது. அவள் மனிதனோடு சமமானவளாக, இருவரும் இணைந்து ஒரே மாம்சமாயிருக்கின்றனர். தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனை முழுமைப்படுத்துபவளுமாய் அவள் இருக்கிறாள்.*

*தேவனுடைய வார்த்தையின் பழைய ஏற்பாட்டில், உதவியாளர் என்னும் பதம் மனிதனோடுகூட வருகிற தேவனையே அதிகமாகக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையின் புதிய ஏற்பாட்டில், இயேசு தாமே தேவனுடைய ஆவியை அல்லது பிரசன்னத்தை நமது உதவியாளராகக் குறிப்பிடுகின்றார்.*

*தேவன் ஆணையும் பெண்ணையும் சமமாகவா அல்லது சமமின்மையாக சிருஷ்டித்தாரா?*

*சமமாக.*

*ஆணும் பெண்ணும் தேவனுடைய அனைத்து சிருஷ்டிப்புகளிலும் தலைசிறந்த படைப்பாவர். மனிதன் (ஆணும் பெண்ணும்) ஒருவரை ஒருவர் நிறைவுசெய்திடவும், சிருஷ்டிகராகிய தேவனோடும், ஒருவரோடொருவரோடும் சமமான தொடர்பு கொண்டிடவும், தேவனுடைய சுவாசத்தை இருவரும் சமமாகப் பெற்றனர்.*



**நன்மைக்காகவே உருவமைக்கப்பட்டனர்**

*ஆணும் பெண்ணும்* ***நன்மைக்காகவே உருவமைக்கப்பட்டனர்****... சமம்-சமம்.*

*இன்றைய உலகம் குறைபாடற்றதாக உள்ளதா?*

*இல்லை.*

*தேவனுடைய குறைபாடற்ற உலகினை மாற்றிட ஒரு காரியம் நிகழ்ந்தது. மனிதனுக்கும் மனுஷிக்கும் பூமி முழுவதையும் ஆண்டுக்கொள்ளும் அதிகாரத்தை, தேவனது குறைபாடற்ற உலகினை பராமரித்திடும் பாக்கியத்தோடு தேவன் கொடுத்தார் என்பதை நினைவில் கொள்ளவும். அவரோடுகூட வெற்றிகரமாக வாழ்ந்திட அவர் அனைத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்.*

*ஜீவனை அல்லது மரணத்தை தேர்ந்தெடுத்திட, தேவனுடைய ஞானம் மற்றும் ஜீவ விருட்சத்திலே பங்கெடுத்திட அல்லது தீயவனின் மோசடியிலும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலேயும் பங்கெடுக்கும்படி தேர்ந்தெடுத்திட, மனிதனையும் மனுஷியையும் தேவன் ஒரு தேர்ந்தெடுக்கும் சுதந்தரத்தோடு சிருஷ்டித்தார்.*

*மனிதனுக்கு (ஆணுக்கும் பெண்ணுக்கும்) தேவன் கொடுத்த தேர்ந்தெடுப்பு* ***என்ன****?*
***ஆதியாகமம் 2:8-9, 15-17*** *வாசிக்கவும்*

*ஜீவனும் மரணமும்.*

*ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தின் முடிவிற்கு முன்னே, முதல் மனிதனும் முதல் மனுஷியும் தேவனுடைய ஞானம் மற்றும் ஜீவ விருட்சத்திலே பங்கெடுப்பதற்கு பதிலாக தீயவனின் மோசடியிலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலேயும் பங்கெடுக்கும்படி தேர்வு செய்தனர். முடிவில் ஜீவனுக்கும் கனி கொடுத்தலுக்கும் வழிநடத்தும் நம்பிக்கையும், நெருக்கமும், தேவனுடைய ஞானத்தை பெறுகிறதுமான உறவை தேர்வு செய்வதற்கு பதிலாக, மனிதனும் மனுஷியும் இறுதியில் மரணத்துக்கும், அழிவுக்கும் வழிநடத்தும் நம்பிக்கையற்ற, இடைவெளியுள்ள, தேவனுடைய ஞானத்தை ஒதுக்கிவிடுகிறதுமான தொடர்பை தேர்வு செய்தனர். மனிதனும் மனுஷியும் இந்த குறைபாடற்ற உலகில் மரணமும் தீமையும் நுழையும்படி அனுமதித்தனர்.* ***ஆதியாகமம் 3:1-7, 16-17*** *வாசிக்கவும்*

*இப்பொழுது மனிதனுக்கும் மனுஷிக்கும் இடையிலான தொடர்பு* ***எவ்வாறு*** *உள்ளது, சமமா அல்லது சமமின்மையா?*

*சமமின்மை.*

*ஒவ்வொருவரும் கட்டுப்பாடு மற்றும் அதிகாரத்துக்காக முனைகின்றனர். மனுஷி மனிதனைக் கட்டுப்படுத்திட ஆசைப்படுகிறாள். மனிதன் மனுஷியின் மீது அதிகாரம் செலுத்திட முயலுகின்றான்.*

**ஆதியாகமம்** 4:7 வாசிக்கவும்


**ஆதியாகமம்** 3:16-17ன் சூழலில் ஆசை என்னும் பதமானது நாடி ஓடி, கட்டுப்படுத்தி, திறமையாக கையாளுதல் என அர்த்தம் கொள்கிறது. **ஆதியாகமம்** 3:16-17ல் ஆளுதல் என்னும் பதம் அதிகாரம் செலுத்தி, அடக்கி ஒடுக்குதல் என அர்த்தம் கொள்கிறது.

தீமையினால் சீரழிந்துபோன மனுஷி இப்பொழுது மனிதனுக்கு **என்ன** செய்திட விழைகிறாள்?

அவன் பின்னே ஓடி, அவனை அடக்கி அவனை கையாள விழைகிறாள்.


தீமையினால் சீரழிந்துபோன மனிதன் இப்பொழுது மனுஷிக்கு **என்ன** இழைத்திட விழைகிறான்?

அதிகாரம் செலுத்தி, அடக்கி ஒடுக்கிட விழைகிறான்.



**தீமையினால் சீரழிந்துள்ளனர்**

மனிதனும் மனுஷியும் **தீமையினால் சீரழிந்துள்ளனர்**...
சமமின்மை-சமமின்மை




**மேலானவற்றிற்காக மறுசீரமைக்கப்படுகின்றனர்**

ஆனால் கதை இங்கே முடிவதில்லை. தேவன் தம்முடைய மிகுதியான அன்பினால் தம் சொந்த சிருஷ்டிக்குள்ளே மாம்சமும் இரத்தமுள்ள ஒரு மனிதனாக வந்து, மனிதனின் குற்றத்தின் விளைவால் உலகில் நுழைந்த எல்லா சீரழிவு, நோய், மரணம் மற்றும் தீமையை தாமே சிலுவையில் ஏற்று, மரித்து, மறுபடியும் உயிர்த்து, எல்லா சீரழிவு, நோய், மரணம் மற்றும் தீமையை மேற்கொண்டு, மேலானவற்றிற்காக நம்மை மறுசீரமைக்கிறார்.

மனிதனும் மனுஷியும் இன்னும் **மேலானவற்றிற்காக மறுசீரமைக்கப்படுகின்றனர்**...சமம்-சமம்

ஆனால் கதை இன்னும் இங்கே முடிவதில்லை. தேவன் தம்முடைய மிகுதியான அன்பினால், தீமையினால் சீரழிந்துள்ள உலகில் தீயவனின் பொய்களை குற்றப்படுத்திடவும், மோசம் போகாதிருக்கும்படி சத்தியத்தை அறிந்திடவும், நம் தன்னலமான இச்சைகளின் மீதும், தீயவனின் மீதும், தீங்கின் மீதும் வெற்றியில் வாழ்ந்திடவும் தமது வல்லமையையும் அதிகாரத்தையும் நமக்கு அருளுகிறார்.

நமது அடக்கி, ஆண்டு, அதிகாரம் செலுத்தும் ஆசையை ஒப்புக்கொடுத்து, நமது பிதாவின் சித்தத்திற்கு தொடர்ச்சியாக அர்ப்பணிக்கப்பட்ட நிலையில் இருந்து, மாம்சத்திலும் இரத்தத்திலும் வந்து, மரித்து, உயிர்த்தெழுந்து, பரலோகத்துக்கேறின இயேசு நமக்கு அளிப்பவற்றை எல்லாம் பெறும்போது, நமது பழைய சுயம் மரித்து, தீமையினால் சீரழிந்துள்ள உலகில் இப்பொழுது நாம் உண்மையாகவே வாழ்கிறோம்.



**குணப்படுத்திட அனுப்பப்படுகின்றனர்**

தேவன் தமது மிகுந்த அன்பினால் தமது சீர்த்திருத்தும் மற்றும் குணப்படுத்தும் திட்ட பணியில் நமக்கு ஒரு பங்கை கொடுக்கிறார். தொகுதி 15 மற்றும் 16ல் தேவனது சரிதையாகிய வேத்திலிருந்து தேவனது அன்பையும் அவரது குணப்படுத்தும் பணியில் அவர் நமக்கு கொடுக்கும் நமது பங்கையும் குறித்து ஆராய்வோம்.

மனிதனும் மனுஷியும் **குணப்படுத்திட அனுப்பப்படுகின்றனர்**...சமம்-சமம்

இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம் **என்ன**?

உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?

# தொகுதி 15: உறவுகள் – சீஷத்துவம்

*நம் வாழ்க்கை பயணத்தில், எச்சூழ்நிலையிலும், நாம் எங்கு சென்றாலும், சர்வ வல்லவரான எங்கும் வியாபித்திருப்பவர் நம்மோடிருக்கிறார் ...நெருக்கமாகவும், தனிப்பட்ட முறையிலும்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*தேவன் நம்மோடிருக்கிறார் என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

## வேத ஆராய்ச்சி

*இப்பயணத்தின் துவக்கத்தில் தேவன் யார் என்றும், அவர் செய்தவைகளையும், செய்யப் போகிறவைகளையும் அறிவதின் மூலம், அவரையும், நம்மீதுள்ள அவரது அன்பையும் அறிவதில் சீஷத்துவம் ஆரம்பிக்கிறதென நாம் கற்றதை நினைவில் கொள்ளவும். அவரது வார்த்தையிலும், அவரது பிரசன்னத்திலும், ஆராதனையிலும், ஜெபத்திலும், பிற விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்வதிலும் நேரம் செலவளிப்பது தேவனை அறிந்திட உதவியாக இருக்கிறது.*

*நமக்குள்ளும் பிறருக்குள்ளும் உள்ள சீஷத்துவம், அனுதினமும் தொடரும் ஒரு செயல். திராட்சைச் செடி தொடர்பைப் பற்றின தொகுதியில் நாம் கற்றது போல, நம் குணாதிசயத்தில் மாற்றமும், நம்மில் ஏற்படும் வளர்ச்சியும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையே. பிறருக்கு தம்மை வெளிப்படுத்திட தேவனுக்கு நாம் தேவை இல்லை. ஆனால் தமது மிகுந்த அன்பினால் தமது திட்டத்தில் நாமும் ஒரு பங்கு பெறும்படி அவர் நம்மைத் தெரிந்துகொண்டார். மற்றவர்கள் தேவனையும், அவரது சத்தியத்தையும், அன்பையும், வல்லமையையும் அறிந்திட முதலாவது அவரைக்குறித்து அவர்கள் கற்றிட வேண்டும்.*

*நாம் **யாருடைய** சீஷர்கள்?*

*இயேசு.*

*சர்வ வல்லமையும் அதிகாரமும் உடையவர் **யார்**? **மத்தேயு 28:18-20** வாசிக்கவும்*

*இயேசு.*

*இம்மூன்று வசனங்களில் இயேசு தம் சீஷர்களிடம் செய்யுமாறு கூறின நான்கு செயல்கள் **எவை**?*

*1. போங்கள்*

*இச்சூழ்நிலையில் போங்கள் என்னும் பதம், நம் வாழ்க்கை பயணத்தில் (எச்சூழ்நிலையில் இருப்பினும்), ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு நாம் பிரயாணமாய் செல்கையில் (எந்த பிரதேசத்தில் இருப்பினும்), அந்த சூழ்நிலை மீதும் எல்லா பிரதேசத்தின் மேலும் இயேசுவுக்கு சர்வ வல்லமையும் அதிகாரமும் உண்டு. தேவனோடு நம் அனுதின நடப்பில், நாம் எங்கிருந்தாலும், அவர் நம் ஒவ்வொருவரோடும் நெருக்கமாகவும், தனிப்பட்ட முறையிலும் இருந்து, தமது ஆவியில் ஒவ்வொரு சீஷருக்குள்ளும் இருக்கிறார்.*

*2. ஞானஸ்நானம் கொடுத்தல்*

*இச்சூழ்நிலையில் ஞானஸ்நானம் என்பது மற்றவர்களும் இயேசுவின் சீஷராகும்படி பலப்படுத்துவதாகும் - அவரையும், அவருடைய அடையாளத்தையும், அவருடைய ஆவியையும், பிதாவையும் பெற்றுக்கொள்ள. அவரில் முழுவதுமாக மூழ்கியிருத்தல் என்பது அவரது வல்லமை, அதிகாரம் மற்றும் அவரது ஆவியினால் நிரந்தரமானதும், நன்மையானதுமான மாற்றத்தை இம்மையிலும் மறுமையிலும் பெறுதல் என்பதாகும்.*

*3. போதனை செய்தல்*

*பலனளிக்கும் போதனை என்பது இயேசுவைக் குறித்து கற்று, அவரோடுள்ள தொடர்பில் வளர்ந்து, பிறருக்கு கற்பித்திடவும் மற்றவர்களை பெலப்படுத்துவதாகும். போதிப்பது என்பது நமக்கு எவ்வளவு தெரியும் என்பதைக் காட்டுவதற்கோ நாம் சரியாக இருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கோ கிடையாது. எல்லா ஜாதியினருக்கும் போதனை செய்தல், ஆணுக்கும் பெண்ணுக்கும் (சமம்-சமம்), பெரியோருக்கும் சிறியோருக்கும் (சமம்-சமம்).*

*4. சீஷர்களை உருவாக்குதல்*


*இச்சூழ்நிலையில் சீஷர்களை உருவாக்குதல் என்னும் செய்கையே அதிமுக்கிய செய்கையாகும். ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலமும் (இயேசுவையும், அவரது அடையாளத்தையும், அவரது ஆவியையும், பிதாவையும் பெற்றுக்கொள்ளும்படி அவர்களை பெலப்படுத்துவது) போதிப்பதின் மூலமும் (இயேசுவைக்குறித்து கற்று, அவரில் வளர்ந்திட அவர்களை பெலப்படுத்துவது) நாம் சீஷர்களை உருவாக்குகிறோம்.*

*இயேசுவின் சீஷர்களை உருவாக்குதலே தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற அவரது யுக்தியாகும் (**எபேசியர் 1:9-10**). சீஷர்களை உருவாக்குதல் என்பது சீஷர்களுக்குள்ளும் சீஷர்கள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியையாகும். சீஷர்களாகிய நமக்கு தேவன் தம் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார், மற்றும் நம்மீதுள்ள தமது மிகுந்த அன்பினால் அவரது திட்டத்தில் நம் ஒவ்வொருவருக்கும் பங்களித்துள்ளார்.*

*இயேசுவைக்குறித்து நாம் கற்று, அவரோடுள்ள தொடர்பில் அனுதினமும் அவரை இன்னும் தனிப்பட்ட முறையில் அறிந்து, வாழ்க்கையில் நம்மோடு பயணிப்பவர்களை அறிந்து, நம்முடன் இயேசு தம்மையே எவ்விதம் பகிர்ந்து கொள்கிறாரோ, அவ்வாறே நாம் பிறரோடு இயேசுவை பகிர்ந்து, இயேசு நமக்கு சேவை செய்வதைப் போலவே நாமும் பிறருக்கு சேவை செய்வதின் மூலம் இயேசுவை சேவிப்பதால், அவருடைய ஆவியினால், அவருடைய நாமத்தில் தேவனுடைய திட்டமானது நிறைவேற்றப்பட்டு வருகின்றது.*

*இயேசுவின் சாட்சியாகிய பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் அனைவருக்குள்ளும் இருப்பதினால், ஒவ்வொரு சீஷருக்கும் ஒரு சாட்சி உண்டு. உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் மறுரூபப்படுத்தும் வல்லமையினால் நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென தேவன் உங்களை சிருஷ்டித்தாரோ, அவ்வாறு நீங்கள் இருப்பதே உங்களது சாட்சியாகும்.*

## சாட்சி பகருதல்




*இயேசுவின் சீஷனாக ஆகும் முன்பு நீங்கள் **எவ்விதமான** நபராக இருந்தீர்கள்?*

*இயேசுவின் சீஷனாக, இயேசு உங்களிலும் உங்களுக்குள்ளும் ஏற்படுத்திய மாற்றத்தை காட்டுபவர்களாக நீங்கள் **எவ்விதமான** நபராக இருக்கிறீர்கள்?*

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை ஏற்றுக்கொள்ள தீர்மானித்து அவருடைய சீஷனான போது, உங்கள் வாழ்வின் சூழ்நிலை **என்ன**?*

*இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை ஏற்றுக்கொள்ளவும் அவருடைய சீஷனாகவும் உங்களை வழிநடத்திய அதிமுக்கியமான காரியம் **என்ன**?*

*இப்பொழுது உங்கள் வாழ்வில் உள்ள அதிமுக்கியமான மாற்றம் **என்ன**?*

*மறுமையில் உங்கள் வாழ்வில் ஏற்படும் அதிமுக்கியமான மாற்றம் **எதுவாக** இருக்கும்?*

*ஒவ்வொருவரும் - ஒருவர் ஒருவராக - தங்கள் சாட்சியை ஒரு கிறிஸ்தவரல்லாதவரோடு பகிர்ந்து கொள்வதைப்போல (இரண்டு நிமிடங்களுக்கும் குறைவாக) பகிர்ந்துகொள்ளவும், நீதி, இரட்சிப்பு போன்ற கிறிஸ்தவப் பதங்களை பயன்படுத்துவதைத் தவிர்த்து, இரட்சிப்பு உங்கள் வாழ்வில் என்ன அர்த்தமாகிறதென விவரிக்கவும்.*

*இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம் **என்ன**?*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம் **என்ன**?*

# தொகுதி 16: உறவுகள் – தேவனுடைய ராஜ்யம்

*நாம் யாரை ஆராதிக்கிறோமோ அவரைப் போல் ஆகிறோம்.*

## ஆரம்ப ஜெபம்

*ஜெபித்து தொகுதியை ஆரம்பிக்கும்படி ஒருவரை கேளுங்கள்.*

## ஆராதனை

*இயேசுவே ராஜா என பறைசாற்றும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைப் பாடல்களை குழுவாகத் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்.*

*இப்பிரயாணத்தின் துவக்கத்தில், தம்மை வெளிப்படுத்தி, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள அனைத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஒன்றாகக் கொண்டுவரும் தமது திட்டத்தையும் நமக்கு வெளிப்படுத்த தேவன் விரும்புகிறார் என நாம் கற்றோம் என நினைவில் கொள்ளவும். இயேசுவே தேவனுடைய ராஜ்யத்தை அரசாள்பவர்.*

## வார்த்தை ஆராய்ச்சி

*ராஜ்யம் என்பது ஒரு ராஜ்யத்தை அரசாள தேவையான உரிமை அல்லது அதிகாரம் அல்லது வல்லமையையும், அந்த அரசாட்சிக்கு அல்லது அதிகாரத்திற்குட்பட்ட நிலப்பரப்பு அல்லது பிராந்தியத்தையும் குறிக்கிறது.*

*தேவன் என்பவர் தலைமையான உன்னத தெய்வம், அவரை நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என அறிவோம்.*

*தேவனுடைய ராஜ்யம் என்பது பரலோகத்தையும் பூலோகத்தையும் அரசாள இயேசுவின் உரிமை அல்லது அதிகாரம் அல்லது வல்லமையாகும். இயேசு கிறிஸ்துவின் செய்தி மற்றும் ஊழியத்தையும், அவரது குணமளிக்கும் பணியில் அவரது சீஷர்களின் பங்கையும் புரிந்துகொள்ள தேவனுடைய ராஜ்ய ஒப்புமை ஒரு முக்கிய பங்களிக்கிறது.*

## வேத ஆராய்ச்சி

***லூக்கா 4:43** மற்றும் **அப்போஸ்தலர் 1:1–4** வாசிக்கவும்*

*இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்து, போதித்தார். தேவனுடைய ராஜ்யத்தை செயல்முறையில் விளக்கினார். இயேசுவே தேவனுடைய ராஜ்யத்தின் அரசர்.*

*தான் மாம்சத்திலும் இரத்தத்திலும் வந்ததின் மூலம் **எது** நிறைவேற்றப்பட்டு வருகிறது என இயேசு கூறினார்? **லூக்கா 4:18–19** வாசிக்கவும்*

1. *தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல்*
2. *இருதயம் நொறுங்குண்டவர்கள் குணமடைதல்*
3. *சிறைப்பட்டவர்கள் விடுதலையடைதல்*
4. *குருடர் பார்வையடைதல்*
5. *ஒடுக்கப்பட்டவர்கள் விடுதலையடைதல்*
6. *இக்காரியங்கள் நடைபெற தேவனால் நியமனமாக்கப்பட்ட காலத்தின் துவக்கம் இதுவே என பறைசாற்றுதல்.*

*தேவனுடைய ராஜ்யமானது தீமையால் சீர்க்கேடடைந்துள்ள உலகிற்குள் இயேசு கிறிஸ்துவில் பூமிக்கு வந்துள்ளது.*

*தேவனுடைய ராஜ்யம் / பரலோக ராஜ்யம் பூலோகில் வந்ததற்கு ஆதாரமென **எதை** இயேசு யோவானிடம் கூறினார்? **மத்தேயு 11:3–5** வாசிக்கவும்*

1. *குருடர் பார்வையடைகிறார்கள்*
2. *சப்பாணிகள் நடக்கிறார்கள்*
3. *குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்*
4. *செவிடர் கேட்கிறார்கள்*
5. *மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்*
6. *தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது*

*பழைய ஏற்பாட்டில், குருடர் பார்வையடைந்து, சப்பாணிகள் நடந்து, செவிடர் கேட்கும் நாட்களைக் குறித்த ஏராளமான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. இது ஆவிக்குரிய குணமடைதலை மாத்திரம் குறிப்பிடவில்லை. தேவனுடைய ராஜ்யம் என்பது முழுமையான குணப்படுத்தல் என இயேசு வெளிப்படுத்தினார்: ஆவி, சரீர மற்றும் மன ரீதியான குணப்படுதல். முழுமையான முழுமையும், சமாதானமும்.*

*பிதாவாகிய தேவன் தீமையினால் சீர்க்கேடடைந்துள்ள உலகிற்கு (தீயவனின் செல்வாக்கிற்குள்ளும் மனிதனின் அதிகாரம் செலுத்தி அடக்கிடும் விருப்பத்தின் கீழும் இருக்கும் உலகிற்கு) சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கவும், நொறுங்குண்ட இருதயமுள்ளோரை குணப்படுத்தவும், தேவனுடைய ராஜ்யம் வந்தாயிற்று என அறிவிக்கவும் இயேசுவை அனுப்பினார். இயேசுவின் மாம்ச இரத்த தியாக பலியை விசுவாசித்துப் பெற்றுக்கொள்கிறவர்கள் என்றென்றும் மீட்கப்படுகிறார்கள். மரணத்தின் ராஜ்யத்திலிருந்து மீட்கப்பட்டு ஜீவனின் ராஜ்யத்திற்குள் மறுபடியும் கொண்டுவரப்படுகிறார்கள்.*

***மத்தேயு 19:13–15** (மேலும் **மாற்கு 10:13–16** மற்றும் **லூக்கா 18:15–17**) வாசிக்கவும்*

*இயேசு சிறு பிள்ளைகளை கண்ணோக்குவதைப்பற்றி நாம் **என்ன** கற்கிறோம்?*

*ஒரு சிறு பிள்ளையின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் தேவனுடைய ராஜ்யத்தோடு இயேசு ஒப்பிட்டிருந்தார், எனினும் சிறு பிள்ளைகளுக்கு பணிசெய்திட அவர் நின்றதன் முக்கியத்துவம் மிக வல்லமையுள்ளது. அது மூன்று சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது. தீமையினால் சீர்க்கேடடைந்துள்ள உலகில் அக்காலத்து கலாச்சாரத்தின்படி சிறுவர்கள் பெரியவர்களைக்காட்டிலும் குறைந்த மதிப்பைப்பெற்றவர்களாய் இருந்தனர். தேவனுடைய ராஜ்யத்தின் கலாச்சாரத்தில் வாழ்கிறவர்களாக அல்லாமல் இவ்வுலகின் கலாச்சாரத்தையே சீஷர்களும் இன்னும் பின்பற்றுகிறவர்களாயிருந்தனர். தமது செய்கைகளின் மூலம், தீமையினால் சீர்க்கேடடைந்துள்ள உலகில் தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டதாயிருக்கிறதென தம் சீஷர்களுக்கு இயேசு கற்பித்து நடைமுறைப்படுத்தி விளக்கினார்.*

*பெரியவர்களோடு ஒப்பிடும்போது சிறு பிள்ளைகளை இயேசு **எவ்வாறு** கண்ணோக்குகிறார், சமமாகவா சமமின்மையாகவா?*

*சமமாக.*

## குழு கலந்தாலோசித்தல்

*தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டதென நீங்கள் நம்புகிறீர்கள் என கலந்தாலோசியுங்கள்.*

1. *தேவனோடும் பிறரோடும், ஆண், பெண், சிறுவன், சிறுமி...சீரமைக்கப்பட்ட உறவுகள்... சமம்-சமம்*
2. *எளியவனும் செல்வந்தனும் வலுவடைகின்றனர்...சமம்-சமம்*
3. *ஒருவரை ஒருவர் கட்டி எழுப்பும் சரி சமமான சமுதாயம்*
4. *இயேசுவை விசுவாசித்து அவரில் வாழும் எல்லா மனிதரையும் சேர்த்துக் கொள்ளுதல்*
5. *நீதி நியாயம், சமாதானத்தோடு சமுதாயம் கட்டப்படுதல்*
6. *சத்தியத்தினாலும் அன்பினாலும் சிறைப்பட்டவர்கள் விடுதலையடைதல்*
7. *நேர்மையான பழக்கங்கள் கலாச்சாரமாகிறது*

*தேவனுடைய ராஜ்யம் இயேசுவில் வெளிப்படுத்தப்படுகிறது.*

*தீமையினால் சீர்க்கேடடைந்துள்ள உலகில், இயேசு தமது ஆவியினால் அவரது வல்லமையிலும், அதிகாரத்திலும், நாம் தேவனுடைய ராஜ்யத்தில் வாழும்படி நமக்கு ஒப்படைத்திருக்கிறார். பிதாவாகிய தேவனின் மகிமைக்காக, முன்கூட்டியே தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பங்கு பெறவும் அருளியிருக்கிறார்.*

*தேவனையும், அவர் நம்மீது கொண்டுள்ள அன்பையும் நாம் அதிகமாக அறிந்து, அவருடைய வார்த்தையிலும், அவரது பிரசன்னத்திலும், ஆராதனையிலும், ஜெபத்திலும் அவரோடுகூட நேரம் செலவளித்து, பிற விசுவாசிகளோடு ஐக்கியம் கொண்டு, இயேசுவிடமிருந்து பெற்று, தீமையினால் சீர்க்கேடடைந்துள்ள இவ்வுலகில் அவரது நிறைவான ஜெயத்தோடு வாழ்ந்து, அவரது மிகுந்த அன்பினை சாட்சி பகர்ந்து, சீஷர்களை உருவாக்கும்போது இம்மையில் நாம் இப்பூமியில் தேவனுடைய ராஜ்யத்தில் வசிக்கிறவர்கள் ஆகிறோம்.*

*இத்தொகுதியிலிருந்து தேவனைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட ஒரு காரியம்* ***என்ன****?*

*உங்கள் நடைமுறையான பதில் / ஜெபம்* ***என்ன****?*

## ஜெபம்

***எபேசியர் 3:14-21*** *ஆகையால் நான் பிதாவாகிய தேவன் முன் மண்டியிட்டு பிரார்த்தனை செய்கிறேன். அவரிடத்தில் இருந்து பரலோகத்திலும், பூமியிலும் உள்ள எல்லாக் குடும்பங்களும் தம் உண்மையான பெயரைப் பெறும் உங்கள் ஆவிக்குள் நீங்கள் வல்லமையுடைவர்களாக இருக்க விரும்புகிறேன். நான் பிதாவை அவரது உயர்ந்த மகிமையின் நிமித்தம் கேட்கிறேன். அவர் தமது ஆவியின் மூலமாக அந்த வல்லமையைத் தருவார். கிறிஸ்து உங்கள் இதயத்தில் விசுவாசத்தின் மூலம் வாழ நான் பிரார்த்தனை செய்கிறேன். உங்கள் வாழ்க்கை அன்பால் கட்டப்படவும், அன்பில் வல்லமையாக இருக்கவும் நான் பிரார்த்தனை செய்கிறேன். நீங்களும் தேவனின் பரிசுத்தமான மக்களும் உயர்ந்த கிறிஸ்துவின் அன்பைப் புரிந்துக்கொள்ளும் சக்தியைப் பெறவேண்டும். அவரது அன்பு எவ்வளவு அகலமானது, எவ்வளவு நீளமானது, எவ்வளவு உயரமானது, எவ்வளவு ஆழமானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.*

*இவ்வாறு தேவனின் சகல முழுமையிலும் நீங்கள் நிறைக்கப்படுவீர்கள். நாம் கேட்பதைவிடவும், நினைப்பதைவிடவும் தேவன் நமக்கு மிகுதியாகச் செய்யத்தக்கவர். தேவனின் வல்லமை நமக்குள் உள்ளது. சபையிலே இயேசு கிறிஸ்துவின் மூலமாக எப்போதும் தலைமுறை தலை முறைக்கும் எல்லாக் காலங்களிலும் தேவனுக்கு மகிமையுண்டாவதாக! ஆமென். (ERV)*

| எந்த மதிப்பும் அற்றவர் | சொற்ப மதிப்புள்ளவர் | மிகுதியான மதிப்புள்ளவர் |
|---|---|---|
| | | |